நவம்பர் 2003

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



**ஏகாதிபத்திய எடுபிடிகளுடன் சி.பி.எம். கூட்டணி**




## எங்கும் கட்டப்பஞ்சாயத்து!

படிப்பகம்

www.padippakam.com

மும்பை குண்டுவெடிப்பு போன்றவை ஒரு எதிர் - பயங்கரவாதத் தாக்குதல்தான் என்ற உண்மையை அட்டைப்படக் கட்டுரை தெளிவுபடுத்தியதோடு, ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் மற்றும் இந்தியா டுடே போன்ற பத்திரிகைகளின் பொய்ப் பிரச்சாரத்துக்கும் ஆப்பறைந்துள்ளது. கர்நாடக விவசாயிகளின் தற்கொலைக்குக் காரணம் இயற்கையின் சீற்றமல்ல; தனியார்மய - தாராளமயக் கொள்கைதான் என்பதை தாராளமய பயங்கரவாதம் என்ற கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. இம்முறை வெளியான அட்டைப்படம் புதிய பாணியில் அமைந்து வாசகர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது. தொடர்ந்து இதே முறையில் அட்டையை வடிவமைக்கலாம்.

- வாசகர் வட்டம்,
திருச்சி.

சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் நடத்திவரும் தாக்குதல்கள், அவர்களை மண்டியிடவோ பயந்து ஓடவோ செய்யவில்லை. எதிர் பயங்கரவாதத்தைத் தொடுக்குமாறு தள்ளியுள்ளது. சிறுபான்மை மக்கள். அனைத்து உழைக்கும் மக்களோடு இணைந்து இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகப் போராடுவதன் மூலமே அதை முறியடிக்க முடியும் என்ற திசைவழியைக் காட்டுவதாக அட்டைப்படக் கட்டுரை அமைந்துள்ளது. சமூக விரோதிகள், பொறுக்கிகள், ரவுடிகளின் பங்காளியாக உள்ள போலீசு, கலாச்சார காவலனாக அவதாரம் எடுத்திருப்பது பாசிச அடக்குமுறைக்கான இன்னொரு வடிவம்தான்! உலகமயத்துக்கெதிராகப் போராடி தியாகியான லீ கியாங் - ஹேவுக்கு நமது அஞ்சலியைச் செலுத்தித் தொடர்ந்து போராட உறுதியேற்போம்!

- நிர்மலா
திருச்சி

புதிய ஜனநாயகம் இதழின் புதிய வாசகன் நான். வெறும் அரசியல் அரட்டை ஏடாக இல்லாமல் சமூக-சாதிய அவலங்களை வெளிப்படுத்தும் சமூக அக்கறையுள்ள இதழாக ஒவ்வொரு பக்கமும் மிளிர்கின்றது. பிறக்கும் போதே ஒருவன் தீவிரவாதியாகப் பிறப்பதில்லை. அவன் தீவிரவாதியாக உருவாக்கப்படுகிறான் என்பதற்கு ''பயங்கரவாத பீதியில் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள்'' என்ற கட்டுரை சான்று.

- மே.முகம்மது சித்தீக்,
நீடாமங்கலம்.




# வாசகர் கடிதம்

பத்தொன்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தங்கள் இதழுக்கு எனது வாழ்த்துக்கள்! தங்களது 18 ஆண்டு இதழ்களில் வெளியான தேர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகளைத் தொகுப்பாக வெளியிட்டால் புதிய தலைமுறையைச் சேர்ந்த வாசகர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமையும்.

- நாச்சிமுத்து,
கோவை.

*(வாசகத் தோழரின் ஆலோசனையைப் பரிசீலித்து ஆவன செய்கிறோம் - ஆசிரியர்குழு)*

''குஜராத்தில் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி கர்ப்பிணிப் பெண்களுடன் ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லை'' என்று மும்பை குண்டு வெடிப்பில் அப்பாவிகள் கொல்லப்பட்டது பற்றிய ஃபாமிதாவின் கூற்றானது, குஜராத்தில் இந்து வெறியர்கள் நடத்திய பயங்கரவாத வெறியாட்டத்தின் கோரத்தை - ஆறாத ரணத்தை உணர்த்துவதாக உள்ளது. இந்துவெறி பயங்கரவாதிகள் உள்ளவரை எதிர்-பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க முடியாது. இந்த விஷச் சுழற்சியிலிருந்து விடுபட முதலில் இந்து வெறி பயங்கரவாதத்தை முறியடிப்பதே ஒரே தீர்வு.

- வாசகர் வட்டம்,
ஜெயங்கொண்டம்.

தங்கள் இதழின் சமீபகால வாசகனாகியிருக்கும் எனக்குப் பல அரிய கருத்துக்களை புதிய ஜனநாயகம் வழங்கியிருக்கிறது. புதிய ஜனநாயகத்தால் மட்டுமே தமிழர்களின் சூடும் சொரணையும் மீட்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இத்தனை ஆண்டுகளாக தங்களது இதழைப் படிக்காமல் இருந்ததற்காக மிகவும் வருந்துகிறேன்.

- ஆகாகான் சாகிப்,
நாகப்பட்டினம்.

போலீசு எனும் அடியாள்படை நாய்களுக்கு மூளை இல்லை என்பதை மறைப்பதற்காகவே அவர்கள் தலையில் தொப்பி வைத்துக் கொள்கின்றனர். இதை நிரூபிக்கும் வகையில், கலாச்சார காவலனாக மாறி மாணவர்கள் மீது வழக்கு போடுவது, பூங்காக்களில் இளங்காதலர்களைப் பிடித்து மிரட்டுவது என்று கேவலமாக இறங்கிவிட்டனர். பாசிஸ்டுகளைப் போலத்தானே அவர்களது அடியாள் படையும் இருக்கும்?

- வே.கணேசமூர்த்தி,
பரமக்குடி.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் மசூதி கட்டப்பட வேண்டும் என ஒரு தீர்ப்பு வருமா? முக்கிய பிரச்சினைகளில் நீதிமன்றத்தை நம்புவது வெட்கக் கேடானது. மேலும் பயங்கரவாதிகளாக ஆர்.எஸ்.எஸ். இருப்பதால்தான், எதிர் பயங்கரவாதம் உருவாகிறது.

- மணிமாறன், எம்.ஏ., பி.எட்.,
வல்லம்.

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

19-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகம் இதழுக்கு நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் கவிதைகள் வாயிலாகவும் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள உங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்துவெறி பாசிசம், மறுகாலனியாதிக்கம் எனும் இருபெரும் அபாயம் நாட்டையும் மக்களையும் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு, பரந்துபட்ட மக்களிடையே அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உறுதியேற்கிறோம்.

- ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 1**

நவம்பர் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


இலங்கை:

## அதிகார சண்டையில் பலியாகும் சமாதான முயற்சி

இலங்கையில் அதிபர் சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவுக்கும் இடையிலான அதிகார மோதல் வெளிப்படையாக முற்றி மீண்டும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்து, தமிழீழப் பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காணும் முயற்சி இழுபறியில் சிக்கிக் கொண்டுள்ளது. தமிழீழ இடைக்கால நிர்வாக அதிகாரத்துக்கான வரைவுத்திட்டத்தை புலிகள் முன்வைத்துள்ள நிலையில், புலிகளுடன் ரணில் அரசு நடத்திவரும் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ரணில் அரசின் போக்கு தேசியப் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் என்று குற்றம் சாட்டும் அதிபர் சந்திரிகா, ரணில் அரசின் மூன்று முக்கிய அமைச்சர்களைப் பொறுப்பிலிருந்து நீக்கி, நாடாளுமன்றத்தை இருவாரங்களுக்கு முடக்கி, நாடெங்கும் அவசர நிலையைப் பிறப்பித்து, முக்கிய பகுதிகளில் இராணுவத்தைக் குவித்து சட்டப் பூர்வ பாசிசத்தை அதிரடியாக அறிவித்துள்ளார்.

சந்திரிகாவும், ரணிலும் சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கத்தின் இருவேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், 2001 தேர்தலுக்குப் பிறகு ரணில் அரசு அமைந்ததிலிருந்தே கருத்து வேறுபாடுகளும் அதிகார மோதல்களும் முற்றி வந்தன. உள்நாட்டுப் போரை நிறுத்தி, சமாதானத் தீர்வு காணும்படி அமெரிக்கா உள்ளிட்டு பல ஏகாதிபத்திய நாடுகள் நிர்பந்தம் கொடுத்து வந்ததோடு, சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை ஒட்டியே இலங்கை-ஈழ புனரமைப்புக்கான பன்னாட்டு நிதி உதவி தரப்படும் என்றும், அதுவும் புனரமைப்புக்கான ஓர் இடைக்கால நிர்வாகம் ஏற்பட்ட பிறகுதான் தரப்படும் என்று அறிவித்திருந்தன. இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இழுபறி, அவநம்பிக்கை, திரைமறைவு சதிகளுக்குப் பிறகு, இறுதியாக இடைக்கால நிர்வாக அதிகாரத்துக்கான வரைவு திட்டத்தை அண்மையில் புலிகள் வெளியிட்டனர்.

ஏற்கெனவே, இப்பேச்சுவார்த்தைகளில் ரணில் அரசின் போக்கு குறித்து அதிருப்தியைத் தெரிவித்து வந்த சந்திரிகா, தற்போது தன்னைக் கலந்தாலோசிக்காமல் அடுத்தடுத்த நடவடிக்கைகளில் ரணில் அரசு ஈடுபடுவதை வெளிப்படையாக எதிர்த்தார். ரணில் அரசோ, சந்திரிகாவை ஓரங்கட்டி விட்டு இச்சமாதான நடவடிக்கைகளுக்கு ஏகாதிபத்திய எஜமானர்களிடம் ஒப்புதல் பெற ஓடியது. சந்திரிகாவின் பாசிசக் கூட்டாளியான தலைமை நீதிபதி தவறான சட்ட விளக்கம் அளிப்பதாக குற்றம் சாட்டி, நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவது, அதைத் தொடர்ந்து சந்திரிகாவின் வானளாவிய அதிகாரத்தைப் பறிப்பது என்ற முயற்சியில் ரணில் அரசு இறங்கியது. இதற்கு முட்டுக்கட்டை போட்டு ரணில் அரசை மிரட்டிப் பணியவைக்கவும், அடுத்த ஆண்டின் முடிவில் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி நிலைநாட்டிக் கொள்ளவும், சமாதான முயற்சிகள் காரணமாக ரணிலுக்குக் கிடைத்துவரும் ஆதரவையும் செல்வாக்கையும் சிதைக்கவும் அதிபர் சந்திரிகா தனது வானளாவிய பாசிச அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுகிறார்.

இந்த அதிகாரப் போட்டியும் சண்டையும் அரசியல் நெருக்கடியும் நீடிக்கும் அதேசமயம், ரணில், சந்திரிகா ஆகிய இருதரப்புமே புலிகளின் வரைவுத்திட்டத்தை ஏற்க மறுத்து ஓரணியில் நிற்கின்றன. புலிகளின் வரைவுத்திட்டம் தனி ஈழத்துக்கான ஏணிப்படியாக உள்ளது, இது இலங்கையின் இறையாண்மைக்கும் ஐக்கியம் - ஒருமைப்பாடு - பாதுகாப்புக்கும் எதிரானது என்று இருதரப்புமே நிராகரிக்கின்றன. ஈழத்தில் மாநில சுயாட்சி என்ற வரம்புக்குட்பட்ட அதிகாரம் மட்டுமே அளிக்கும் வகையில் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடரப் போவதாக இருதரப்புமே அறிவித்துள்ளன. ஏகாதிபத்திய நிர்பந்தம் காரணமாக சமாதானப் பாதையை விட்டு, இராணுவத் தீர்வுகாண முடியாத நெருக்கடியில் அவை சிக்கிக் கொண்டுள்ளன.

மறுபுறம், தமது ஏகபோக தலைமையின் கீழான ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்தித் தருமாறு கோரும் புலிகள், தமது சமாதான முன்னெடுப்புகள் தாம் எதிர்பார்த்த திசையில் முன்னேறாததால் மீண்டும் இழுபறி வளையத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர். புனரமைப்பு என்ற பெயரில், தமிழ்தரகுப் பெருமுதலாளிகளின் நலன்களை முன்வைத்து ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்கத்திற்குள் ஈழத் தமிழர்களை இழுத்துப் போடும் புலிகளின் முயற்சியும் இப்போது பின்னடைவுக்குள்ளாகி விட்டது. சமாதான முயற்சிகளை முறித்துக் கொண்டு மீண்டும் போரில் குதிக்கவும் புலிகளுக்குச் சாதகமான நிலைமைகள் இப்போது இல்லை. மீண்டும் பேச்சு வார்த்தை, பேரங்கள், குற்றச்சாட்டுகள், குழப்பங்கள், இழுபறி என்ற விஷச் சுழற்சியிலிருந்து புலிகள் மீளவும் வழியில்லை. சிங்கள, முசுலீம் ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியப்பட்டுப் போராடுவதன் மூலமே, ஈழத் தமிழின மக்கள் தமது நியாயமான சுயநிர்ணய உரிமையைப் பெறமுடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# எங்கெங்கு காணினும் கட்டப் பஞ்சாயத்து!

கட்டப் பஞ்சாயத்து முறையை ஒழித்துகட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்பதைப் போல பத்திரிக்கைகள், வானொளி ஆகியவற்றின் துணையோடு உயர்நீதிமன்றமும் போலீசும் கடந்த சில மாதங்களாக பரபரப்பூட்டி வருகின்றன.

''வாதப் பிரதிவாதங்களைக் கேட்டு, அலசி ஆராய்ந்து, அமைதியாக தீர்ப்புச் சொல்லும் வழக்கமான ஒரு உம்மணாமூஞ்சி நீதிபதியல்ல நான், அறிவுஜீவியாக்கும்!'' என்று காட்டிக் கொள்ளும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் உயர்நீதி மன்ற நீதிபதி கற்பகவிநாயகம் கட்டப்பஞ்சாயத்துக்களுக்கு எதிராக காரசாரமான கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

''ஆலமரம், அம்மன் கோவில் என்று உட்கார்ந்துகொண்டு, தண்டனையும் அபராதத் தொகையும் பஞ்சாயத்தார் விதிக்கின்றனர். இந்தப் பஞ்சாயத்து அல்லது கட்டப் பஞ்சாயத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தமிழக அரசு ஓர் அவசர சட்டத்தை பிறப்பிக்கலாம்'' என்றும் பரிந்துரைத்திருக்கிறார்.

போலீசுடன் மோதல் - என்கௌண்டர் என்ற பெயரில் தூத்துக்குடி மாவட்டம் நாடார் சாதி ''தாதா'' வெங்கடேசப் பண்ணையாரை சென்னையில் வைத்து சுட்டுக் கொன்று விட்டு, சாதி சங்கங்களின் எதிர்ப்புக்கு இலக்காகி இருக்கிறார்கள், சில போலீசு அதிகாரிகள். ''வெங்கடேசப் பண்ணையாரைப் போல சென்னையில் 60 கட்டப் பஞ்சாயத்துக் கும்பல்கள் உள்ளன. அவற்றைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம். கிரிமினல் கும்பல் தலைவர்களான கட்டப் பஞ்சாயத்துத் தாதாக்களை ஒடுக்கியே தீருவோம்'' என்று ஆவேச அறிக்கைகள் - பேட்டிகள் தருகின்றனர், போலீசார்.

ஆனால், குக்கிராமம் முதல் உச்ச நீதிமன்றம் வரை நாட்டில் நடப்பது என்னவோ கட்டப் பஞ்சாயத்து தான். எங்கும் எதிலும் சட்டம் - நீதிமுறை, நேர்மை - நியாயம் என்றபடியான நடைமுறை கிடையாது என்பதுதான் உண்மையாக உள்ளது.

கடந்த மாதத்தில் ஒருநாள் மதுரையில் உள்ள நீதிமன்றங்களை வழக்கறிஞர்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து விட்டார்கள். ''மாஜிஸ்ரேட் கோர்ட்டானாலும் செசன்ஸ் கோர்ட்டானாலும் அங்கு போவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. சம்பந்தப்பட்ட பார்ட்டிகளையும் போலீஸ்காரர்களையும் தங்கள் சேம்பருக்குக் கூப்பிட்டு நீதிபதிகள் பஞ்சாயத்து பேசி எல்லாப் பிரச்சினைகளையும் முடிவு செய்கிறார்கள், கோர்ட்டில் அறிவிக்கின்றார்கள். இங்கே ஒரு கேசும் நடப்பது கிடையாது, இதைக் கண்டித்து முறைப்படி வழக்கு நடத்த வேண்டும் என்று கோரித்தான் நாங்கள் இன்று கோர்ட்டுகளை புறக்கணிக்கின்றோம்'' என்று வக்கீல்கள் அறிவித்தார்கள்.

இதுதான் நாடு முழுவதும் உள்ள மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இருந்து உச்சநீதி மன்றம் வரை நிலைமையாக உள்ளது. இன்னும் சொல்லப் போனால் உயர், உச்சநீதி மன்றங்களில் பகிரங்கமாகவே கட்டப் பஞ்சாயத்துக்கள் நடத்துகிறார்கள். சட்டப்படியோ, விதிப்படியோ எந்தத் தீர்ப்பும் கூறப்படுவதில்லை.

ஒவ்வொரு போலீசு நிலையங்களிலும் அன்றாடம் நடப்பது கட்டப் பஞ்சாயத்துதான். அதுவும் கிரிமினல் 'தாதா' முறையில் போலீசு அதிகாரத்தைக் காட்டி, அடித்து, மிரட்டி பஞ்சாயத்துக்கள் செய்யப்படுகின்றன. முறைப்படி வழக்குகள் பதிவு செய்து நீதிமன்றங்களுக்கு வழக்குகளைக் கொண்டுபோவதென்பது அறிதாகவே நடக்கிறது. இப்படி செய்வது ஒன்றும் தவறில்லை என்று உயர் போலீசு அதிகாரிகள் பகிரங்கமாக பேட்டி கொடுக்கிறார்கள்.

ஆனால், ஒரு முன்ஜாமீன் வழக்கை விசாரித்த நீதிபதி கற்பக விநாயகமும், போலீசு அதிகாரிகளும் கட்டப் பஞ்சாயத்து முறைக்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துக்கள் வீண் பிரமைகளைத்தான் ஏற்படுத்தி வருகின்றன என்ற உண்மையை மறுக்க முடியாது.

***

**கிராம பஞ்சாயத்து என்ற போர்வையில் நடைபெறும் சாதி ஆதிக்க கும்பலின் கட்டப் பஞ்சாயத்து.**



திருச்சி மாவட்டம், துறையூர் அருகேயுள்ள வளையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுகந்தி என்ற தொலைபேசித்துறை ஊழியரையும், அவரது தாயாரையும் அவ்வூர் பஞ்சாயத்தார் ஐந்து மணி நேரம் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் செய்த குற்றம், சுகந்தி தனது கொடுமைக்காரக் கணவனிடம் இருந்து விவாகரத்து கோரி

www.padippakam.com

யது தான். அதற்காகக் கடுமையான அபராதம் விதித்து, பஞ்சாயத்தார் முன்பு காலில் விழுந்து கும்பிடச் செய்து இருக்கிறார்கள்.

வேறு வழியின்றி சுகந்தி துறையூர் வக்கீல் ஒருவர் மூலமாகப் போலீசில் புகார் தரவும், மாநில மனித உரிமை ஆணையமும் விசாரணையில் இறங்க மாவட்டப் போலீசு அதிகாரிகள் கைது செய்யும் ''முயற்சி''யில் இறங்கினர். முன்ஜாமீன் கேட்டு உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்தார்கள், வளையப்பட்டி பஞ்சாயத்தார்கள்.

முன்ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி கற்பக விநாயகம், சுகந்தியிடமும் அவரது தாயாரிடமும் விளக்கம் கேட்டறிந்தார். சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு, பொரிந்து தள்ளிவிட்டார்.

''கிராமத்தில் பஞ்சாயத்துப் பண்ண உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? சட்டம் இருக்கு; கோர்ட் இருக்கு; போலீசு இருக்கு; நீங்கயாரு தண்டனை கொடுக்க? நீங்கள் எப்படி அபராதம் விதிக்கலாம்? நீங்கஎல்லாம் காட்டுமிராண்டி காலத்தில் இருக்கிறீர்களா, இந்த நூற்றாண்டில் இருக்கிறீர்களா?''

''வேலைவேட்டி இல்லாமல், குடித்துவிட்டு, சீட்டுவிளையாடிக் கொண்டு பஞ்சாயத்து என்ற பெயரில் ஒரு அபலைப் பெண்ணை இப்படி வதைத்திருக்கிறீர்களே?'' என்று வளையப்பட்டி பஞ்சாயத்துக்காரர்களிடம் கேட்டிருக்கிறார், நீதிபதி கற்பக விநாயகம்.

பஞ்சாயத்தில் வசூலித்த அபராதத் தொகையை உடனே கோர்ட்டில் கட்டும்படி உத்திரவிட்டார். பஞ்சாயத்துக்காரர்கள் ஒவ்வொருவராக சுகந்தி குடும்பத்திடம் மன்னிப்புக் கோரும்படி செய்தார்.

''மேற்கொண்டு ஏதாவது தகராறு செய்தால் ஊரை விட்டு ஒதுக்கி வைப்பேன் என்று மிரட்டிய பஞ்சாயத்தார் தமிழகத்தை விட்டே ஒதுங்கியிருக்க நேரிடும்'' என்றும் எச்சரித்து விட்டிருக்கிறார்.

***

இந்த வழக்கில் ஒரு அபலைப் பெண்ணுக்குத் தற்காலிக நிவாரணம் கிடைத்திருக்கிறது. அதைபோல வளையப்பட்டி பஞ்சாயத்தாரின் அக்கிரமத்திற்கு ஒரு இடைக்காலத் தடை ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். ஆனால், நீதிபதி கற்பக விநாயகம் வேறெதோ நாட்டில் இருப்பவரைப்போல பேசி, தானே ஒரு கட்டப் பஞ்சாயத்து



**கட்டப் பஞ்சாயத்துகளுக்கு எதிராக அதிரடித் தீர்ப்பு வழங்கிய நீதிபதி கற்பகவிநாயகம்.**

செய்திருக்கிறார் என்ற உண்மையையும் மறுக்க முடியாது.

உயர்நீதி மன்றத்தில் முன்ஜாமீன் மனுக்களை விசாரிக்கும் பொறுப்பில் உள்ள நீதிபதி கற்பக விநாயகம் காந்திய பாணியிலான, அறிவுஜீவித்தனமாக சில தீர்ப்புகளை வழங்கி வருகிறார். ஆனால், சட்டப்படி அவையெல்லாம் கட்டப் பஞ்சாயத்துக்கள் தான்.

நீதிமன்றங்களின் வழக்கு விசாரணை, வாதப்பிரதிவாதங்களினூடே நீதிபதிகள் சண்டப் பிரசண்டம் செய்யும் வகையில் சில கருத்துக்களைக் கூறுவதும் ஆனால், அவற்றிற்கு நேர் எதிரான தீர்ப்புக்கள் கூறுவதும் பிரபல கட்டப் பஞ்சாயத்து நீதிபதிகளின் அணுகுமுறையாக உள்ளது.

சமீபத்தில் தொடுக்கப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் - அரசு ஊழியர் போராட்டம் சம்பந்தமான வழக்குகளிலும் உயர், உச்சநீதி மன்றங்கள் செய்தது கட்டப் பஞ்சாயத்துதான்.

இந்த வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் முறுக்கி முறுக்கி கேள்விகள் கேட்டு அரசு வழக்கறிஞர்களைத் திணறடித்தார்கள். நள்ளிரவு கைதுகள், உருட்டல் - மிரட்டல்கள், பொய் வழக்குகள் எல்லாவற்றையும் கண்டித்தார்கள். இலட்சக்கணக்கானோரை திடீரென வேலைநீக்கம் செய்தது போன்ற அதிரடி நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கினார்கள். ஆனால், இவற்றிற்கு நேர்எதிரான தீர்ப்புகளை வழங்கினார்கள். வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதம் என்றால் வேலை நீக்கம் செய்தது சரியே என்று தீர்ப்பு வழங்கி இருக்க வேண்டும். அல்லது வேலைநீக்கம் செய்தது சரியில்லை என்றால் வேலை நிறுத்தமும் நியாயம் என்று தீர்ப்பு வழங்கி இருக்க வேண்டும். ஆனால், வேலை நிறுத்தம் அடிப்படை உரிமை இல்லை, அதில் ஈடுபட்டது குற்றம் என்று கூறிக்கொண்டே வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி கட்டப் பஞ்சாயத்து செய்தனர்.

அதேபோலத்தான் குஜராத்தில் ஒரு ரொட்டிக்கடையில் வைத்து பதினேழு முசுலீம்கள் எரித்து கொல்லப் பட்ட வழக்கில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் ஒரு குஜராத் விரைவு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்கள். இதை எதிர்த்து மேல் முறையீடு உச்சநீதி மன்றத்துக்கு வந்தது. அப்போது குஜராத் மோடி அரசை கடுமையாகச் சாடிய உச்சநீதி மன்றம்? வெற்று சவடால் அடித்து விட்டு வழக்கை குஜராத்துக்கு வெளியே நடத்தக் கோரியதை நிராகரித்து விட்டது. பாசிஸ்டு மோடி அரசை குஜராத்திலேயே வழக்கை சரியாக நடத்தும்படி ஒரு கண்துடைப்பு தீர்ப்பு மட்டும் வழங்கியது.

இவை உச்ச, உயர்நீதி மன்றங்கள் நடத்திய கட்டப் பஞ்சாயத்துக்கு சமீபத்திய சான்றுகள்.

நீதிபதி கற்பக விநாயகம், நம்ம செட்டி நாட்டு தேவகோட்டைகாரார் தான். செட்டிநாட்டு கிராமத்து மக்கள் மண்ணோடு கலந்த பால் நிறத்தில் தேங்கும் குளத்து நீரை தெளிப்பாங் கொட்டை போட்டுத்தான் இன்னமும் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் செட்டிநாட்டு நீதியரசரோ ஏதோ பிரிட்டிஷ் மகாராணியின் அவையிலே கொலு வீற்றிருக்கும் பிரபுக்களைப் போல கேள்விகளை வீசி திணறடிக்கிறார். செட்டி நாட்டிலே உள்ள கண்டதேவி கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேரிழுக்க உரிமைகோரி பெற முடியாமல் இன்னமும் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். நாட்டுப் பஞ்சாயத்து எனப்படும் கட்டப் பஞ்சாயத்தார்கள்தான் இதற்குத் தடையாக நிற்கிறார்கள் என்பது அவருக்கு தெரியாதா?

செட்டிநாடு எனப்படும் சிவகங்கை - ராமநாதபுர மாவட்டங்களில் பல ஆண்டுகளாக ''நாடு'' என்ற முக்குலத்தோர் சாதி ஆதிக்கம் வகிக்கும் பஞ்சாயத்துக்கள் நிறையவே உண்டு. ஒவ்வொரு நாட்டுக்கும் கட்டுப்பட்ட பட்டி தொட்டிகளில் எந்த ஒரு விவகா


படிப்பகம்

www.padippakam.com

ரமானாலும் தகராரானாலும் இந்த நாட்டு பஞ்சாயத்துக்குத்தான் போக வேண்டும். அதில் சொல்லப்படும் தீர்ப்புக்கு மேல் முறையீடு இல்லாமல் எல்லா சாதி மக்களும் கட்டுப்பட்டே தீர வேண்டும்.

தேவகோட்டையையும் அதைச் சுற்றியும் உள்ள இருபத்திரண்டரை கிராமங்களை உள்ளடக்கியது இரவுச்சேரி நாடு. அந்த நாட்டுக்கு இப்போது பெரியகருப்பன் அம்பலம்தான் தலைவர். கண்ணங்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள நாற்பது கிராமங்களை உள்ளடக்கியது கப்பலூர் நாடு. இதன் தலைவராக உள்ளவர் காங்கிரசு எம்.எல்.ஏ., கே.ஆர். ராமசாமி. இந்த நாட்டுப் பஞ்சாயத்துத் தலைவர்கள் நீதிபதி கற்பக விநாயகத்தின் கருத்தை மறுத்து, ''நீதித்துறையும் காவல்துறையும் எந்தவித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு மக்களின் முழு நம்பிக்கையும் பெற்றுவிட்டால் நாட்டுப் பஞ்சாயத்துக்களுக்கு அவசியமே இருக்காது.'' ''நியாயம் கிடைக்கும்னு ஏழை மக்கள் நம்புகிறவரை, இந்தப் பஞ்சாயத்துகளைத் தடை பண்ணக் கூடாது. நாட்டுப் பஞ்சாயத்துக்கள் அவசியம் இருக்கத்தான் வேண்டும். அதை நசுக்க முடியாது'' என்று பத்திரிக்கைகளுக்குப் பேட்டி கொடுத்தனர்.



ஆணாதிக்க கட்டப் பஞ்சாயத்து கும்பலால் தண்டிக்கப்பட்ட சுகந்தி.

உடனே சூடேறிய நீதிமன்ற வட்டாரம் இந்த நாட்டுப் பஞ்சாயத்துத் தலைவர்களை அழைத்து விளக்கம் கோரி நடவடிக்கை எடுப்பதாக உதார் விட்டார்கள். பின்னர் முடங்கி போய் விட்டார்கள். காரணம் கட்டப் பஞ்சாயத்து என்பது நாட்டின் பல நூற்றாண்டுகளாக புரையோடிப்போயிருக்கிறது. அதற்கு ஒரு மாற்றை எந்த அரசினாலும் ஏற்படுத்த முடியவில்லை.

ஒவ்வொரு ஊரிலும் நாட்டாமை, ஊர்க்கவுண்டர், அம்பலக்காரர், ஊர்த்தலைவர், மந்திரி என்று பல பெயர்களில் பஞ்சாயத்து நடத்துபவர்கள் இருக்கிறார்கள். பெரும் பண்ணையார்களோ, ஆதிக்க சாதியினரோ வைத்ததுதான் அங்கெல்லாம் சட்டமாக இருக்கிறது. ஊர்க்கட்டுப்பாடு, சாதிக்கட்டுப்பாடு, கோயில் முன்பு சத்தியம், விலக்கி வைக்கும் மிரட்டல், ஏழைகளுக்கு தாங்க முடியாத அபராதம் விதித்தல் போன்ற பல வடிவங்களில் கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் தமது தீர்ப்பை மக்கள் மீது திணிக்கிறார்கள்.

கடலூர் அருகே கலப்பு திருமணம் செய்து கொண்ட வன்னிய, தாழ்த்தப்பட்ட ஜோடியினர் ஊர்ப் பஞ்சாயத்துத் தீர்ப்பின்படி, அவர்களுடைய பெற்றோர்களாலேயே விஷம் கொடுத்துக் கொன்று, எரிக்கப்பட்டனர். விழுப்புரம் மாவட்டம், வடுகப்பூண்டியில். இதுபோல பெற்றோர் சம்மதத்துடன் கலப்புத் திருமணம் செய்துகொண்ட வன்னிய - தாழ்த்தப்பட்ட தம்பதியை ஊர்ப்பஞ்சாயத்து என்ற பெயரில் சாதிவெறியர்கள் தேடிப்பிடித்து இழுத்து வந்து, மரத்தில் கட்டிவைத்து அடித்து, பெற்றோர்களுக்கும் அபராதம் விதித்து, இருவரையும் விலக்கி வைத்துள்ளனர். இப்படித் தினந்தோறும் எவ்வளவோ ஊர்களில் பஞ்சாயத்து என்கிற பெயரில் கொடுமைகள் நடக்கின்றன.

சாதி ஆதிக்கம், நில அல்லது வேறு சொத்து ஆதிக்கம், உள்ளூர் அரசியல் ஆதிக்கம் மற்றும் போலீசு ஆதரவு போன்றவைதான் இந்தப் பஞ்சாயத்துக்கள் நடத்துவதற்கான அதிகாரத்தை தருகின்றன. இந்த உண்மையை அறியாதவரா நமது செட்டிநாட்டு நீதியரசர்? இல்லை உச்சநீதி மன்றத்திலோ, உயர்நீதி மன்றத்திலோ உட்கார்ந்து கொண்டு உத்திரவு போட்டால் அது அப்படியே நடந்துவிடும் என்று நம்புகிறாரா?

கடந்த சாத்தான்குளம் இடைத் தேர்தலில், வெளியூர் குண்டர் படையோடு ஆளுங்கட்சி ''தாதா''க்கள் முகாமிட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார் கொடுத்தன. அவர்களைத் தொகுதியிலிருந்து வெளியேற்றும்படி உத்திரவு போட்டது, தேர்தல் ஆணையம். இதைப் பயன்படுத்திக் கொண்டு, எதிர்க்கட்சிப் பிரமுகர்களை மட்டும் தொகுதியிலிருந்து வெளியேற்றிவிட்டு, ஆளுங்கட்சி குண்டர்கள் கேள்விமுறையின்றி தேர்தல் தில்லுமுல்லுகள் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தது, போலீசு.

நீதிமன்றமோ, மனித உரிமை ஆணையமோ, தேர்தல் ஆணையமோ, பெண்கள் - தாழ்த்தப்பட்டவர் - சிறுபான்மையினர் ஆணையமோ போடும் உத்தரவுகள் - முடிவுகளை எல்லா மட்டங்களிலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும் அவர்களின் கீழுள்ள நிர்வாக மற்றும் போலீசு அமைப்புகளும்தான் அவற்றை அமலாக்க வேண்டும். இந்த அமைப்புகளோ மக்கள் விரோதமாக, சட்டவிரோதமாக, ஜனநாயக விரோதமாகத் தானே செயல்படுகின்றன. அவை சாதி மற்றும் வர்க்க ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டுத்தானே இயங்குகின்றன. பஞ்சாயத்துக்களை ஒழித்துக் கட்டிவிட்டு இந்த நிர்வாக, போலீசு அமைப்பின் கீழ்தான் பஞ்சாயத்து விவகாரங்களை ஒப்படைக்க முடியும். அப்படி இருக்கும்போது ஏழை மக்களுக்கு நீதி நியாயம் எப்படி கிடைக்கும்?

கிராமப்பஞ்சாயத்துக்களை ஒழிப்பதற்கு எதிராக அந்த ஆதிக்க சக்திகள் மறுக்க முடியாத சில வாதங்களை முன்வைக்கின்றன.

''உள்ளூர் பஞ்சாயத்துக்களைக் தடை செய்துவிட்டு, கிராமங்களில் எழும் நிலத் தகராறு, சாதித் தகராறு, குடும்பத் தகராறு, கோவில் தகராறு, சொத்துத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு என்ன ஏற்பாடு உள்ளது? இந்த வழக்குகள் போலீசிடம் போனால் லஞ்சம், கோர்ட்டுக்குப் போனால் பல ஆண்டு இழுத்தடிப்பு, பணவிரயம் - இவை தானே நடைமுறையாக உள்ளன. இதனால் ஏழை - எளிய மக்கள் நீதி, நியாயம் பெற முடியுமா?''

''நகரத்தில் கட்டப்பஞ்சாயத்தும் போலீஸ் பஞ்சாயத்தும் நடக்கிறது. கிராமத்தில் சாதிப் பஞ்சாயத்தும், கிராமப் பஞ்சாயத்தும் நடக்கிறது. நகரத்தில் நடக்கும் பஞ்சாயத்துக்களை தடுக்க சிறு முயற்சி கூட இன்னும் எடுக்கப்படவில்லை'' என்கிறார், இலவச சட்ட உதவி மையம் நடத்தி வரும் ராஜா என்ற வழக்கறிஞர்.



படிப்பகம்

www.padippakam.com

பெரம்பலூர் மாவட்டம், வெள்ளனூர் கிராமப் பஞ்சாயத்தார் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட இரு சிறுமிகளின் கைகளில் கற்பூரம் ஏற்றிக் கொளுத்தியிருக்கிறார்கள்.

இதேபோல ஒரு திருட்டுக் குற்றத்திற்காக வாலாஜா போலீசார் என்ன செய்தார்கள் தெரியுமா? தெருவில் நாட்டு மருந்து விற்கும் ஒரு வடநாட்டு குடும்பத்தையே இழுத்துக் கொண்டு போய், பல நாட்கள் சட்ட விரோதமாக போலீஸ் லாக்கப்பில் வைத்து, அடித்து சித்திரவதை செய்தார்கள். வேலூர் அருகே திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞரை போலீசார் இழுத்துக் கொண்டு போய் 'என்கௌண்டர்' என்ற பெயரில் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். நாமக்கல் விரைவு நீதிமன்ற நீதிபதி வீட்டில் திருடியதாக இழுத்துச் செல்லப்பட்ட அவரது கார் டிரைவர் போலீசால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

அந்த வெள்ளனூர் கிராமப் பஞ்சாயத்தை விட இந்த போலீசு, நீதிபதிகளின் பஞ்சாயத்து எவ்வளவு கொடூரமானது பாருங்கள்.



அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனுடன் பண்ணையார்.

தமிழ்நாடு எங்கும் கிரிமினல் குற்றக் கும்பல் 'தாதா'க்கள் கட்டப் பஞ்சாயத்து நடத்துவது அனைவருக்கும் தெரிந்த உண்மை. போலீசு, ஆளும் வர்க்க அரசியல் கட்சி பிரமுகர்களின் முழு ஆதரவுடன் தான் இந்தக் கிரிமினல் பஞ்சாயத்துக்கள் நடக்கின்றன. கள்ளச் சாராயம் - போதை மருந்து கடத்துவது, கொலை, கொள்ளை, கற்பழிப்புக் குற்றம் புரிவது, மாமூல் வசூலிப்பது, கூலிக்கு கொலை செய்வது அப்பாவிகளின் சொத்துக்களை அபகரிப்பது, சொத்துத் தகராறுகளை வன்முறையால் - கமிசன் வாங்கிக் கொண்டு தீர்த்து வைப்பது என்று பல்வேறு கிரிமினல் குற்றங்களில் இந்த 'தாதா'க்கள் ஈடுபடுகின்றனர்.

போலீசு நிலையங்கள் முன்பும், கோர்ட்டு வளாகங்களுக்குள்ளேயும், பட்டப்பகலில் நடுத்தெருவிலேயும், அரசு மருத்துவமனைகளிலேயும் இந்த கிரிமினல்கள் ஒருவரை ஒருவர் வெட்டிப் படுகொலைகள் செய்யும் பொழுது அல்லது போலீசாரையே எதிர்த்துத் தாக்கும் பொழுது மட்டும் இந்த கிரிமினல்கள் பற்றிய செய்திகள் பரபரப்பாக அடிபடுகின்றன. இதையெல்லாம் பல ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருக்கும் போலீசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. எதிர்க்கட்சிகளை ஒடுக்குவது போன்ற கிரிமினல் நடவடிக்கைகளுக்கும் இந்த கும்பல்களை போலீசார் பயன்படுத்தி வருகின்றனர். பாக்ஸர் வடிவேலு, அயோத்தி குப்பம் வீரமணி, பங்க் குமார், வெங்கடேச பண்ணையார் போன்ற கிரிமினல் தாதாக்களை ஆளுங்கட்சியும் போலீசும் பயன்படுத்தி வந்தது, பகிரங்கமான ரகசியம்.

தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் தமது கட்டுப்பாட்டை கிரிமினல் 'தாதா'க்கள் மீறி செயல்படும் போது மட்டும் 'என்கௌண்டர்' என்கின்ற பெயரில் சுட்டுக் கொல்கின்றனர் போலீசார். அப்போது மட்டும் கொல்லப்பட்டவர்கள் மீது இத்தனை கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழக்குகள் இருக்கின்றன என்பதாக அடுக்குகின்றனர். இப்படித்தான் போலீசாராலேயே வளர்க்கப்பட்ட ஆசைத்தம்பி, கபிலன், வீரமணி, வெங்கடேசப் பண்ணையார் போன்ற கிரிமினல் தாதாக்களைக் கொன்றுவிட்டு போலீசார் அறிக்கைகள், பேட்டிகள் கொடுக்கின்றனர். இப்போது திடீரென்று சென்னை நகரில் மட்டும் அறுபது கட்டப்பஞ்சாயத்து கிரிமினல் குழுக்கள் இருப்பதாக கூறுகின்றனர்.

தென் மாவட்டங்களில் பல ஆண்டுகளாகவே செல்வின், ஜான் பாண்டியன், பசுபதி பாண்டியன், சோலை ரவி போன்ற கிரிமினல் தாதாக்கள் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் தலைமையிலான கிரிமினல் கும்பல்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று வருகிறார்கள். சென்னையில் ஆசைத்தம்பி, கபிலன் ஆகிய நாடார் சாதி கிரிமினல் 'தாதா'க்கள் கொல்லப்பட்ட பிறகு தமிழ்நாடு முழுவதும் அவர்களின் 'பொறுப்புக்களை' ஏற்று கட்டப் பஞ்சாயத்து செய்யப் புறப்பட்டவர்தான் வெங்கடேச பண்ணையார்.

ஆனால், ஏதோ சமுதாயக் காவலன், தியாகி என்பதாகச் சித்தரித்து ஆதாயம் தேட அவரது சாதி சங்கங்கள் முயற்சிக்கின்றன. சாதி சங்கங்களில் கிரிமினல் தாதாக்கள் புகுந்து கொண்டு தங்களுக்கு பாதுகாப்பும் செல்வாக்கும் தேடிக்கொள்வதொன்றும் புதிதல்ல.

தமிழ்நாடு முழுவதும் எத்தனை கட்டப் பஞ்சாயத்து கிரிமினல் தாதாக்கள் இருக்கின்றனர், அவர்கள் ஒவ்வொருவர் மீதும் எத்தனை கிரிமினல் குற்ற வழக்குகள் பல ஆண்டுகளாகத் தண்டிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன, எத்தனை வழக்குகளில் அவர்கள் தப்புவிக்கப்பட்டனர், இந்த உண்மைகளைத் தொகுத்துப் பார்த்தாலே கிரிமினல் 'தாதா'க்களின் கட்டப் பஞ்சாயத்துக்கு நீதி மன்றமும் போலீசும் எவ்வாறு துணை நிற்கின்றன என்பது புரியும்.

கிராமப் பஞ்சாயத்து, கிரிமினல் 'தாதா'க்களின் பஞ்சாயத்து, போலீசு பஞ்சாயத்து, நீதிமன்ற பஞ்சாயத்து ஆகிய அனைத்தும் சேர்ந்து நாட்டிலுள்ள சட்டபூர்வ நீதி, நிர்வாகத்திற்கு இணையாக ஒரு கட்டமைப்பு போல செயல்படுவதையே இவையெல்லாம் காட்டுகின்றன. புரட்சிகர மாற்று அதிகார மையங்களை எல்லா மட்டங்களிலும் நிறுவுவதன் மூலம் மட்டுமே இத்தகைய பஞ்சாயத்துக்களை ஒழிக்க முடியும். இவை மட்டுமே மக்களுக்கான பஞ்சாயத்துக்களாக செயல்படும்.

● மாணிக்கவாசகம்

# காவிரி சவடாலும் வறண்டு போனது

வடகிழக்குப் பருவ மழை ஆரம்பித்துவிட்டது. இந்த மழையில் முதலில் அடித்துச் சென்றது காவிரி பிரச்சினைதான். இனி, திரும்பவும் வெய்யில் காய்ந்தால்தான் காவிரி பிரச்சினையை எல்லோரும் தேடுவார்கள். அதுவரை, காவிரிப் பாசன விவசாயிகள் திருவிழாவில் தொலைந்து போனவர்கள் மாதிரி அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான்!

இதோ வருகிறது, அதோ வருகிறது என்று மலையாள மாந்தரீகம் போல் காவிரி நீர் பற்றி சோதிடம் சொன்னது, ஜெயலலிதா அரசு. கடைசியில் மழை நீரைக் காட்டி ''எப்படியோ தண்ணீர் வந்துவிட்டது; அம்மா சொன்னது பலித்துவிட்டது'' என்கின்றனர் அவரது பக்தகோடிகள். வழக்கமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு புத்தாண்டில் ஜனவரி 28 அன்று திரும்பவும் மூடப்படும். ஆக, 7 மாதங்கள் மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் கரைபுரண்டு வரும். குறுவை, சம்பா, தாளடி என்று விவசாயிகள் மூன்று போகம் பயிரிட்டு, நிமிரவும் நேரமில்லாமல் பாடுபடுவார்கள்.

இவையெல்லாம் சினிமாவில் வருவது மாதிரி, ''அது ஒரு நிலாக் காலம்'' என்று பாடி நினைவுகளை அசைபோட மட்டும்தான் உதவும். விவசாயிகள் உட்பட, இதை எல்லோரும் ஒருவாறு அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டார்கள். தமிழக மக்கள் இந்த 'சிந்தனைத் தெளிவை' பெறுவதற்குத்தான் இவ்வளவு நாளும் 'இனமான'த் தலைவர்கள் அனைவரும் படாதபாடு பட்டார்கள்.

இதே காவிரி நீர் பிரச்சினைக்காக சென்ற ஆண்டு செல்வி ஜெயலலிதா 'புலியை முறத்தால் விரட்டிய வீரத் தமிழ்த் தாய்க்கு' நிகராகப் போற்றப்பட்டார். இதில் சில தமிழினக் குழுக்களும் கூட அடக்கம்.

✱ தமிழகத்தின் 50-க்கும் மேற்பட்ட ஓட்டுக்கட்சித் தலைவர்களை தில்லிக்கு அழைத்துச் சென்று காவிரி நீர் கோரி வாஜ்பேயிடம் மனு கொடுத்தார். சினிமா நடிகர், நடிகைகள் இயக்குநர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களை, ''கலையுலகின் காவிரி நீர் மீட்பு போராட்டம்'' நடத்த அரசு செலவில், நெய்வேலிக்கு அனுப்பி வைத்தார். இதற்காக, தனது வளர்ப்பு மகன் திருமணத்திற்கு விருந்து சமைத்த சேவகப் பெருமாளையும், 200-க்கும் மேற்பட்ட குளிர்பதன பேருந்துகளையும் ஏற்பாடு செய்தார்.

✱ கனவுலக நிரந்தர முதல்வர் நடிகர் ரஜினிகாந்த், தன் பங்குக்கு தனியாக காவிரிப் போராட்டத்தில் குதித்துச் சாகசம் செய்தார். நாளொன்றுக்கு 1.25 டி.எம்.சி. நீரை தரச் சொல்லி கர்நாடகத்திற்கு ஆணையிட்ட ''உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஆண்டவன் தீர்ப்பு'' என்று மேடையில் எழுதிவைத்துக் கொண்டு சென்னையில் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தார். ஜெயலலிதாவை எதிர்த்து, 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் திடீரென உருவாக்கிய காவிரி அரசியல் நிழலில், அரசியல் அநாதைகள் அனைவரும் அவசரமாகத் தஞ்சம் புகுந்தனர். பா.ஜ.க.; காங்கிரசு மட்டுமல்ல; கருணாநிதியும், கிருஷ்ணசாமியும் கூட இதில் முண்டியடித்தனர்.

இந்த ஆண்டு இந்தப் பரிவாரங்கள் எல்லாம் என்ன ஆனது? எங்கே போனது என்றே தெரியவில்லை. இவர்கள் எல்லோரும் சொல்லி வைத்த மாதிரி மௌனம் சாதிப்பது ஏன்? இவர்கள் போராட்டத்தைக் கண்டு மிரண்டு கர்நாடகம் பணிந்துவிட்டதா? அல்லது, காவிரியில் கர்நாடக அரசு அனுப்பிய நீர் கரைபுரண்டு ஓடுகிறதா? சென்ற ஆண்டு கர்நாடக அரசை 'ஒத்தைக்கு ஒத்தை' கூப்பிட்ட இவர்கள், இந்த ஆண்டு சண்டை ஆரம்பிக்கும் முன்பே, காணாமல் போனது ஏன்?

இப்பவும், எப்பவும் ஓட்டுப் பொறுக்குவதற்கு காவிரி பிரச்சினை தேவை என்பது ஜெயலலிதாவுக்கு மட்டுமல்ல, எல்லா ஓட்டுக்கட்சிகளுக்கும் தெரியும். சற்று வித்தியாசமாக இருக்கட்டுமே என்று காவிரிப் பிரச்சினையை அரசு விழாவாகக் கொண்டாடி கோபப்பட்டார் ஜெயலலிதா. வேப்பிலை, உடுக்கை, திருநீறு அடித்து சாமிக்கு உக்கிரம் வரவழைப்பது மாதிரிதான் இதுவும். திடீரென, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தமிழ் இனப்பற்று நீர் ஊற்று மாதிரி பொங்கிவர வேண்டும் என்றால் வேறு என்ன செய்வது?

அந்த நேரத்தில்தான், டான்சி வழக்கு விசாரணையைக் காட்டி மைய அரசு ஜெயலலிதாவை மிரட்டிக் கொண்டிருந்தது. கரணம் தப்பினால் மரணம் என்பதை உணர்ந்த ஜெயலலிதா காவிரி நீர் வேண்டும் என்று சாமியாடினார். சினிமாவில் வருவது மாதிரியே டான்சி கத்தி, பூமாலையாக மாறி பூமாரி பொழிந்தது.

மறுபுறம், காவிரி நீரை நம்பி, ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயம் சார்ந்த உப தொழில்களை நம்பி கிராம கூலி-ஏழைகள் பலகோடி பேர் அரை வயிறு கஞ்சிக்கும் வழியில்லாமல் அலைகின்றனர். அவர்களின் குழந்தை - குட்டிகள் சென்னை சாலைகளில் பிச்சையெடுக்கின்றனர். காவிரி டெல்டா பகுதிகள், யுத்தத்தில் சிதைந்த பகுதிகள் போல் காட்சியளிக்கின்றன. அங்கிருந்து மக்கள் சாரை சாரையாக அகதிகள் போல் வெளியேறுகின்றனர்.

வறட்சியின் நடுவே வாண வேடிக்கை.



www.padippakam.com



காவிரி நீர் கோரி அனைத்துக்கட்சிக் கூட்டம்: ஆண்டுதோறும் நடக்கும் திவசம்.

இவை அனைத்திற்கும் பொறுப்பு ஏற்க வேண்டிய பார்ப்பன பாசிஸ்டு ஜெயலலிதா, இதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லையென்பது போல் அலங்காரத்தேரில், மகாராணி போல் தமிழகத்தைச் சுற்றி வந்து ரசித்துக் கொண்டிருக்கிறார். கர்நாடக அரசோ, 1924-ஆம் ஆண்டு காவிரி நீர் ஒப்பந்தம், 1991-ஆம் ஆண்டு காவிரி நீர் தீர்ப்பாயம் வழங்கிய இடைக்கால ஆணை, 3.9.2002 அன்று காவிரி நீர் பங்கீடு பற்றி உச்ச நீதிமன்றம் வழங்கிய ஆணை மற்றும் 9.9.2002 அன்று வாஜ்பேயி தலைமையிலான காவிரி ஆணையம் வழங்கிய உத்திரவு, - இவற்றில் எதையும் எள்முனை அளவு கூட மதிக்கவில்லை.

காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவது என்பதை சமீப காலமாக எல்லா ஓட்டுக்கட்சிகளும் ஏறக்குறைய கைகழுவிவிட்டன. காவிரி நீருக்கு கர்நாடகத்திடம் கையேந்துவதுதான் இப்போது போராட்டமாகச் சித்தரிக்கப்படுகிறது. ''கொஞ்ச நீராவது வாங்கிக் கொடு'' என்று மைய அரசையும் சேர்த்துக் கெஞ்சுவது என்று போராட்டத்தை, அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்கிறார்கள் வலது, இடது போலிகள். இவர்கள் வீரஞ்செறிந்த தஞ்சை விவசாயிகளின் போராட்ட மரபை நீர்த்துப் போக வைத்து மைய அரசிடம் மண்டியிட்டுக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

மறுபுறம், கர்நாடக அரசு காவிரி நீரை மட்டுமல்ல, மகாராஷ்டிரா மாநிலத்தில் உற்பத்தியாகும் கிருஷ்ணா நதி நீரையும் அம்மாநிலத்தை விட அதிகமாகப் பெற்று அனுபவிக்கிறது. கிருஷ்ணா நதி நீர் மகாராஷ்டிராவுக்கு 560 டி.எம்.சி., கர்நாடகத்திற்கு 800 டி.எம்.சி., ஆந்திராவுக்கு 700 டி.எம்.சி. என்று பங்கிடப்பட்டுள்ளது. இந்தப் பங்கு கிடைக்காத போது, மகாராஷ்டிர அரசு பண்டரிபுரா இடத்தில் பீமா நதியின் குறுக்கே கட்டிய சஜ்ஜெயின் என்ற அணையின் மதகை விவசாயிகளைத் திரட்டிச் சென்று கர்நாடக அரசு உடைத்தது.

ஆனால், தமிழகத்தை ஆளும் மானங்கெட்ட இனமான ஓட்டுக்கட்சிகளோ கர்நாடகத்தை ஆளும், தேசியம் பேசும் கட்சிகளை மாறிமாறி சுமந்து திரிகின்றன. தேசியக் கட்சிகளை திறம்பட சுமக்கும் கழுதை யார்? என்பதுதான் இவர்களுக்குள் நடக்கும் போட்டி. இதை நிரூபிக்கும் லாவணிதான் இவர்களது அன்றாட அரசியல். காவிரி நீர் பிரச்சினை போன்ற தமிழக மக்களின் உயிராதார உரிமைகள் எல்லாம் திராவிடக் கட்சிகளிடம் சிக்கிச் சின்னாபின்னமாகின்றன.

இந்த லட்சணத்தில், தூங்காமல் தான் தினமும் 20 மணிநேரம் உழைப்பதாக கூறுகிறார், ஜெயலலிதா. பாவமாகத்தான் இருக்கிறது. 'நாய்க்கு நிற்பதற்கும் நேரமில்லை. செய்வதற்கும் வேலையில்லை' என்பதுபோல அவர் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். எதிரணி ஓட்டுக் கட்சிகளோ, நேரம் பிசகாமல் வரும் ராகுகாலம், எமகண்டம் போல், ஆண்டுக்கு இன்னின்ன நாட்களில் காவிரி பிரச்சினைக்கு மனுக் கொடுப்பது; பிறகு கரிநாள் என்று தூங்கி விடுவது என்று காலம் கழிக்கிறார்கள்.

வாஜ்பாயியோ, 'காவிரி பிரச்சினையா, அமெரிக்கப் பிரச்சினையா, நாட்டுக்கு எது முக்கியம்? அரசியல் தெரியாமல் விளையாடுகிறீர்கள்!' என்று எரிந்து விழுகிறார். சீனா, ஹாங்காங் என்று சுற்றுலா சென்று வரும் அவர், நேரம் இருந்தால் பேசுவதாக தமிழகத் தலைவர்களிடம் உறுதி கொடுத்திருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, காவிரி பிரச்சினையில் அரசியல் கலக்காமல் இருதரப்பு விவசாயிகளே பேசிக்கொள்வது என்று 'இந்து' ராம் உள்பட பல அறிவாளிகள் தனியாக, அரசு சாரா அமைப்புகளாக இயங்குகிறார்கள். மைய அரசு மற்றும் உலக வங்கியின் அதே கொள்கைகளை வண்ணம் பூசி விற்கிறார்கள். குறைந்த நீர், மாற்றுப் பயிர் என்று பழம், காய்கறிகள், பூந்தோட்டம், மூலிகை செடிகள் என்று தங்கள் பங்களாக்களில் இருக்கும் 'ரூஃப் கார்டன்' மாதிரி விவசாயத்தை 'ஹாபி' யாக மாற்றிக் கொள்ளும்படி விவசாயிகளுக்கு ஆங்கிலத்தில் பாடம் எடுக்கிறார்கள்.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போன கதையாக இப்போது, இவர்கள் ''கங்கை-காவிரியை இணை! தென்னக நதிகளை இணை!'' என்று போடும் கூச்சல் கேட்கச் சகிக்கவில்லை. இதற்காக மக்கள் இயக்கம் எடுக்கும் வழிச் செலவுக்கு ரூபாய் ஒரு கோடியை தரத் தயாராக இருப்பதாக அறிவித்தார் கனவுலக முதல்வர் ரஜினிகாந்த்.

''கானல் நீர் வேண்டாம்; காவிரிநீர் கொடு!'' - விவசாயிகள் போராட்டம்.



ஆக, காவிரி வறண்டு போனதால் வாழ்க்கை இருண்டு போனவர்கள் விவசாயிகள், கூலி - ஏழைகள் மட்டும்தான். ஆனால், ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் சினிமா கழிசடைகளுக்கும் வறண்ட காவிரி, அவர்களின் அரசியல் வாழ்க்கையை பூத்துக்குலுங்க வைக்கும் வளமான விளைநிலமாக இருக்கிறது.

● பச்சையப்பன்



படிப்பகம்

# அமெரிக்கா தயாரித்து வழங்கும்

# உலகமய எதிர்ப்பு

மனித உரிமை, பெண்ணுரிமை, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, தலித் விடுதலை போன்ற நுண் அரசியல் தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இப்போழுது உலகமயத்திற்கு எதிராகவும் 'போர்க் கொடி' தூக்கத் தொடங்கி இருக்கின்றன. திடீர் புளியோதரை, திடீர் ரசம் என்பது போல, திடீர் ஏகாதிபத்திய எதிர்ப்பு கோஷம் போடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் முக விலாசமாக ''உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம்'' **(World Social Forum)** என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. 'உலகமயத்திற்கு எதிராக' ஏற்கனவே மூன்று மாநாடுகளை பிரேசில் நாட்டில் நடத்தியுள்ள 'உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம்', தனது நான்காவது மாநாட்டை, அடுத்த ஆண்டு சனவரி மாதம் மும்பய் நகரில் நடத்தவுள்ளது.

போலி கம்யூனிஸ்டுகளும், சில புரட்சியாளர்களும் கூடத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கதம்ப அமைப்பான உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை, உலகமயத்தை எதிர்க்கும் முற்போக்கு அமைப்பாகக் காட்டுகிறார்கள்; உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தில் இணைந்துள்ள முற்போக்கு - ஜனநாயக சக்திகளை வென்றெடுப்பதற்காக அதனுடன் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என நியாயப்படுத்துகிறார்கள்.

முற்போக்கு சக்திகளை வென்றெடுப்பதற்காக உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தோடு கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்றால், இதே காரணத்தைக் கூறி, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தோடு கூட உறவு வைத்துக் கொள்ளலாம். சுதேசி விழிப்புணர்வு இயக்கம் ஆர்.எஸ்.எஸ். இன் வாலாக இருந்தாலும் கூட, சிறு முதலாளிகள், நடுத்தர வர்க்கப் பிரிவினர் போன்ற 'ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு சக்திகள்' அதிலும் இருக்கிறார்கள்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல்வேறு அரசியல் தளங்களில் இயங்கி வருகின்றன. சில சமயங்களில், அடித்தட்டு மக்களை திரட்டிக் கொண்டு, வரம்புக்கு உட்பட்ட அளவில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் எனப் போராட்டங்களைக் கூட நடத்துகின்றன. அரசியல் கட்சிகளை வெறுத்து ஒதுக்கும் நடுத்தர வர்க்க அறிவுத் துறையினர் கூட, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் இணக்கமாக நடந்து கொள்கின்றனர். எனினும், இத்தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை, மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள சேவை அமைப்புகள் என்றோ, முற்போக்கு நிறுவனங்கள் என்றோ கருத முடியுமா என்பதுதான் அடிப்படையான பிரச்சினை.

ஆர்.எஸ்.எஸ்., தனது இந்து மத வெறி பாசிச முகத்தை மறைத்துக் கொள்ள சேவை முகமூடியை (ரயில் விபத்து, வெள்ளம் ஏற்படும் பொழுது ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவது) மாட்டிக் கொள்வது போன்றதுதான் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவையும்! இன்னும் சொல்லப் போனால், தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பிழைப்புவாத, காரியவாத கண்ணோட்டத்தோடு அணுகும் தொழிற்சங்கப் புரோக்கர்களுக்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இடையே எவ்வித வேறுபாடும் கிடையாது.

தரகுப் பெரு முதலாளித்துவ நிறுவனமான டி.வி.எஸ். இல் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்ட 'வரலாற்றை', அந்நிறுவனத்தின் முதலாளிகளுள் ஒருவர் இப்படி கூறியிருக்கிறார்: 'டி.வி.எஸ். நிறுவனத்தில் ஒரு தொழிற்சங்கத்தை ஏற்படுத்த நான் பெரிதும் முயற்சி எடுத்தேன்; அதன்படி நாங்களே ஐ.என்.டி.யு.சி. சங்கத்தை இங்கே நிறுவினோம்... எப்படியும் ஒரு சங்கம் உருவாகத்தானே போகிறது, அது நமக்கு விசுவாசமான சங்கமாக இருந்தால் நல்லதல்லவா!'

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட வரலாறும் இதைப் போன்றதுதான். ஏகாதிபத்தியம் ஒரு நாட்டை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியவுடனேயே, அங்கு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெடிப்பது தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது. அப்படிப்பட்ட போராட்டங்களைத் தனக்குச் சாதகமாகச் சிதறடிக்கவும், மழுங்கடிக்கவும், ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்டு, இயக்கப்படுபவைதான் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்.

சுதந்திர போராட்டக் காலத்தில் இத்தொண்டு நிறுவனங்கள், கிறித்தவ மிஷனரிகள் என்ற வேடத்தில் வந்தன. அடித்தட்டு மக்களுக்கு கல்வி அளிப்பது, மருத்துவ உதவிகள் செய்வது போன்றவை மூலம், அவர்களின் எதிர்ப்பை மழுங்கடிக்க முயன்றன. நாடு விடுதலையடைந்த பிறகு, தெலுங்கானா, நக்சல்பாரி விவசாய எழுச்சிகளையடுத்து, இவை கிராமப்புற மேம்பாடு என்ற பெயரில் விவசாயிகளின் எழுச்சியைத் தணிக்க முயன்றன. தற்பொழுது, மக்களின் அரசியல் அறிவும், உணர்வும் முற்போக்காக வளர்ச்சியடைந்து வருவதையடுத்து, இத்தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேடம் போட்டு வரவும் தயாராகி விட்டன. இதற்காகவே, உலக சமூகக் கலந்தாய்வுக்கூடம் உருவாக்கப்பட்டு, அதில், பல பட்டறை அமைப்புகளும் உறுப்புகளாக இணைக்கப்படுகின்றன.

போலி கம்யூனிஸ்டுகள், ஏகாதிபத்தியங்கள் உருவாக்கியுள்ள இந்த மோசடித்தனத்தை அம்பலப்படுத்தாமல், அதற்கு முற்போக்கு முலாம் பூசுகிறார்கள். அதே சமயம், இம்மோசடித்தனத்தை அம்பலப்படுத்தி வரும் புரட்சியாளர்களை வறட்டுவாதிகள் என்றும், உலகின் புதிய புரட்சிகரப் போக்கைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்றும் சாடுகின்றனர்.

உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம் உருவாக்கப்பட்ட பின்னணியையும், அதற்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்பையும், அதன் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தையும் ஆதாரங்களோடு இக்கட்டுரையில் அம்பலப்படுத்தி இருக்கிறோம். இந்த விவரங்களில் இருந்து, போலி கம்யூனிஸ்டுகள் கூறுவது போல, உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம் உலகமயத்தை எதிர்க்கும் முற்போக்கு

www.padippakam.com

அமைப்பா? இல்லை, புரட்சியாளர்கள் கூறுவது போல, அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய கைக்கூலி அமைப்பா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை வாசகர்களிடம் விட்டுவிடுகிறோம்.

**உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம் உருவான பின்னணி**

ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம், தனக்கு எதிராக மக்கள் மத்தியில் எழும் எதிர்ப்பை இரண்டு வழிகளில் தோற்கடிக்க முயலுகிறது. ஒன்று, போலீசையும் இராணுவத்தையும் ஏவிவிட்டு நேரடியாக மோதி ஒடுக்குவது; மற்றொன்று, நைச்சியமான முறையில், எதிர்ப்பை நிறுவனமயமாக்கி விழுங்கிவிடுவது. அதாவது, மக்கள் எதனை எதிர்த்துப் போராடுகிறார்களோ, அதனைத் தானும் எதிர்ப்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கி, மக்களின் போராட்டத்தை திசை திருப்புவது.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உலகமயத்திற்கு எதிரான போராட்டங்கள் 1990-களின் இறுதியில் தீவிரமடைந்தன. அமெரிக்காவிலுள்ள சியாட்டில் நகரில், 1999 நவம்பரில் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் கருத்தரங்கை எதிர்த்து நடந்த பல்வேறு ஆர்ப்பாட்டங்களிலும் 50,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உலகமயத்திற்கு எதிரான போர்க்குணமிக்க போராட்டங்களின் தொடக்கப் புள்ளியாக சியாட்டில் அமைந்தது.

சியாட்டிலைத் தொடர்ந்து நடந்த ஏகாதிபத்திய நிறுவனங்களின் ஒவ்வொரு மாநாடும், கருத்தரங்கும், இதே போன்ற எதிர்ப்புகளை எதிர்கொள்ள நேரிட்டது. ஏப்ரல் 2000 இல் வாஷிங்டனில் நடந்த உலக வங்கி - ஐ.எம்.எஃப் சந்திப்பின் பொழுது பிரெஞ்சு நிதிமந்திரி ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டார்;

செப்டம்பர் - 2000 இல் மெல்போர்னில் நடந்த உலகப் பொருளாதாரக் கலந்தாய்வுக் கூட்டத்தின் பொழுது, ஆஸ்திரேலிய பிரதமர் ஜான் ஹோவர்டும், மைக்ரோசாஃப்ட் அதிபர் பில் கேட்ஸும் சுற்றி வளைக்கப்பட்டனர்.

ஜூலை 2001-ல் இத்தாலியின் ஜெனோவா நகரில் நடந்த மேலாதிக்க வல்லரசுகளின் மாநாட்டின் பொழுது, மாநாடு நடந்த பகுதியினைச் சுற்றி நான்கு மீட்டர் உயரத்திற்கு இரும்பு வேலி அமைக்கப்பட்டது. அந்நகரில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பது கூடத் தடை செய்யப்பட்டது. மாநாட்டின் முதல் நாளன்று போலீசாரோடு நடந்த மோதலில், கார்லோ கியுலியானி என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.



**உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை உருவாக்கிய பிரேசில் தொழிலாளர் கட்சி தலைவரும், பிரேசில் அதிபருமான லுலா டி சில்வா.**

உலகமயத்தை மிகத் தீவிரமாக ஆதரித்துவரும் ''எக்கானமிஸ்ட்'' என்ற இலண்டனைச் சேர்ந்த வார ஏடு, ''இந்தப் போராட்டங்களை வெறும் சில்லுண்டித்தனமான தொந்தரவு என ஒதுக்கித்தள்ளுவது மிகப் பெரிய தவறு... மேற்குலகில் வாழும் பெருவாரியான மக்களின் ஆதரவை இப்போராட்டம் பெற்றுள்ளது... அவர்கள் எழுப்பும் பல்வேறுவிதமான பிரச்சினைகளும், உலகமயத்தால் விளைந்துள்ள பாதிப்புகளைப் பற்றிய மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளன'' எனக் குறிப்பிட்டு ஏகாதிபத்தியவாதிகளை எச்சரித்தது.

உலக வர்த்தகக் கழகத்தின் தலைமை இயக்குநரான ரெனட்டோ ருக்கேரோ இன்னும் ஒருபடி மேலே போய், ''பொதுமக்களின் அக்கறைக்குரிய பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளைப் பேசுவதற்கு, இன்றைய உலகப் பொருளாதாரத்தைச் சேர்ந்த அனைவரையும், இன்றுள்ள உலக அமைப்புக்குள் சேர்க்காவிட்டால், அவர்கள் இன்றைய உலகப் பொருளாதார அமைப்பைச் சிதைக்கும் வண்ணம், வேறு தீர்வுகளை நோக்கித் திரும்பிவிடுவார்கள்'' என எச்சரித்தார்.

இதன் பிறகுதான் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்ட ''அட்டாக்'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமும், உலக வங்கியின் செல்லப் பிள்ளையான பிரேசில் தொழிலாளர் கட்சியும் இணைந்து, ''உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை'' நிறுவின.

1999-க்குப் பிறகு, உலகமயத்தை எதிர்த்து ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடந்த பல்வேறு போராட்டங்களும் ஒரே தலைமை - திட்டத்தின் கீழ் நடைபெறவில்லை. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அராஜகவாதிகள், பசுமைக் கட்சி, முதலாளித்துவ தொழிற்சங்க அமைப்புகள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினர் அதில் கலந்து கொண்டனர். இந்த தொளதொளப்பான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, உலகமயத்தை எதிர்க்கும் சர்வதேச அமைப்பாகத் தன்னைக் காட்டிக் கொள்ள, உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம் முயன்றது.

**மூலவர்களின் முகவிலாசம்**

உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை நிறுவிய அமைப்புகளுள் ஒன்றான ''அட்டாக்''கிற்கு உலகமயத்தை வீழ்த்த வேண்டும் என்ற குறிக்கோளெல்லாம் கிடையாது. மாறாக, ''பங்குச் சந்தையில் நடைபெறும் ஊக வாணிபத்தைச் சீர்திருத்த வேண்டும். இந்த ஊக வாணிபத்தின் மீது 0.1 சதம் வரி விதித்து, அதில் கிடைக்கும் பணத்தை சமூக நலதிட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்பதுதான் அதன் தலையாய கொள்கை. சில கிராமங்களில், ஊர்ப் பொதுக் காரியத்திற்குப் பணத்தை வாங்கிக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்ச அனுமதிக்கப்படுவதற்கும், அட்டாக் கோரும் சீர்திருத்தத்திற்கும் பெரிய வேறுபாடு கிடையாது.

பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூட, ஏழை நாடுகளின் கடன் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் எனக் கோரி வருகின்றன. ஆனால், ''அட்டாக்'' அமைப்போ, கடன் பிரச்சினை குறித்து ஏழை நாடுகளும் ஏகாதிபத்தியங்களும் பேசி முடிவுக்கு வர வேண்டும் எனக் கோருவதோடு வரம்பிட்டுக் கொள்கிறது.

தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்த வேண்டும் என்பது உ.வ.க. விதிக்கும் முக்கியமான நிபந்தனை. இது பற்றி ''அட்டாக்'' என்ன கூறுகிறது தெரியுமா? ''தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கவும், அவர்களைத் தடாலடியாக வேலையில் இருந்து நீக்கவும் முதலாளிகளுக்கு உரிமை உண்டு; அதேசமயம், தொழிலாளர்


படிப்பகம்

www.padippakam.com

களைத் தடாலடியாக வேலையில் இருந்து துரத்தியடிப்பதை, முதலாளிகள் கடைசி ஆயுதமாகத் தான் பயன்படுத்த வேண்டும்'' எனப் புத்திமதி சொல்கிறது.

''2001-ஆம் ஆண்டில் மட்டும் ''அட்டாக்'' அமைப்பு, ஐரோப்பிய யூனியனிடமிருந்தும், பிரான்சு அரசிடமிருந்தும் மூன்று இலட்சம் யூரோ டாலர்களை நன்கொடையாகப் பெற்றுள்ளது; உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை நிறுவுவதற்காக பிரான்சு நாட்டின் வெளியுறவுத் துறையிடமிருந்து 80,000 யூரோ டாலர்களை நன்கொடையாகப் பெற்றுள்ளது'' என பிரான்சில் இருந்து வெளிவரும் லே மாண்டி, லே எக்கோஸ் என்ற இரு நாளிதழ்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

''அட்டாக்'' - உடன் இணைந்து உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தை நிறுவிய பிரேசில் தொழிலாளர் கட்சி, கடந்த ஆண்டு பிரேசிலில் நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஐ.எம்.எஃப். நிபந்தனையின் படி உபரித் தொகை கிடைக்கும்படி பட்ஜெட்டைத் தயாரிப்போம்'' என வாக்குறுதி அளித்தது. நமது நாட்டில் தனியார்மயத்தை அமல்படுத்தும் முதலாளித்துவ ஓட்டுக்கட்சிகள் கூட, இப்படி பச்சையாக ஐ.எம்.எஃப். காலில் விழுவது கிடையாது.

அதிபர் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்த பிரேசில் தொழிலாளர் கட்சி, பல சமூக நலத் திட்டங்களை வெட்டி, பட்ஜெட் உபரியை 3.5 சதவீதத்தில் இருந்து 4.6. சதவீதமாக உயர்த்தியது. இதற்குப் பரிசாக இந்த ஆண்டில் மட்டும் 560 கோடி அமெரிக்க டாலர் அந்நிய மூலதனத்தைப் பன்னாட்டு நிறுவனங்கள் பிரேசிலுக்கு அள்ளிக் கொடுத்தன.

அமெரிக்காவை எதிர்த்தால் பொருளாதாரத் தடையுத்தரவு என்ற தாக்குதல்தான் ஏவப்படும். ஆனால், உலகமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் பிரேசில் தொழிலாளர் கட்சியின் ஆட்சியிலோ, அந்நிய மூலதனம் வண்டி வண்டியாகக் குவிகிறது. எனில், இவர்களின் எதிர்ப்பு, முகமூடி என்பது தவிர வேறென்னவாக இருக்க முடியும்?

## கொள்கை பித்தலாட்டம்

''ஏகாதிபத்தியத்தின் எந்தவொரு வடிவத்தையும்; உலகம் மூலதனத்தால் ஆதிக்கம் செய்யப்படுவதையும்; நவீன தாராளவாதத்தையும் எதிர்க்கும் குழுக்கள் மற்றும் சமூக இயக்கங்களுக்கான திறந்த வெளி அரங்கம் இது'' என உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம் தனது சாசன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

''ஏகாதிபத்தியம், மூலதனம், நவீன தாராளமயம்'' - இவற்றை எதிர்த்துப் போராடுவது என்பது சாதாரண விசயமல்ல. இப்போராட்டம் சாராம்சத்தில் அமெரிக்காவின் தலைமையில் திரண்டுள்ள மேலாதிக்க வல்லரசுகளை எதிர்த்துப் போராடுவதாகும். தன்னை எதிர்க்கத் துணியும் நாடுகளை / குழுக்களை நிர்மூலமாக்குவதற்கு அமெரிக்கா சகலவிதத்திலும் தயாராகவே இருக்கிறது. இப்படிபட்ட பயங்கரவாத அமெரிக்காவை எதிர்த்துப் போராட முன்வரும் எந்தவொரு அமைப்பும் அதற்குத் தகுந்தாற் போல, அரசியல், அமைப்பு பலத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உலக சமூகக் கலந்தாய்வுக் கூடமோ, தன்னை ஓர் அமைப்பு என்று கூறிக் கொள்ள மறுக்கிறது. மாறாக, அது, தன்னை, ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்றும் கருத்துக்களை விவாதிப்பதற்கான திறந்த வெளி அரங்கம் என்றே கூறிக் கொள்கிறது.




**ஐதராபாத்தில் போலி கம்யூனிஸ்டுகளின் பங்கேற்போடு நடந்த ஆசிய சமூக கலந்தாய்வுக் கூட மாநாட்டை ஒட்டி நடந்த ஊர்வலம்.**

இதனால்தான் மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிவரும் அமைப்புகளும், கம்யூனிசப் புரட்சியாளர்களும், ''உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம், தொளதொளவென்று வடிவமைக்கப்பட்ட சிதறலான அமைப்பு; இதனிடம் திட்டமோ, கொள்கையோ, தொலைநோக்குப் பார்வையோ கிடையாது'' என இதன் போலித்தனத்தை அம்பலப்படுத்தி வருகின்றனர்.

''கொள்கை அறிக்கை, கட்சி அரசியல் என்றிருந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது'' எனக் கட்சி அமைப்பு முறையைக் கிண்டலடிக்கும் உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தின் ஆதரவாளர்கள், ''நாங்கள் பல தலைகளைக் கொண்டவர்கள்; அரசியல் தலைமையை நசுக்குவது போல, எங்களை அழித்து விட முடியாது; நாங்கள் எல்லாத் திசைகளில் இருந்தும் ஏகாதிபத்தியத்தைத் தாக்குவோம்'' என மார்தட்டுகிறார்கள்.

ஏகாதிபத்தியத்தை அனைத்துத் திசைகளில் இருந்தும் தாக்க வேண்டும் என்றால், அதற்கொரு திட்டம் வேண்டும்; அதனைச் செயல்படுத்த வேண்டும். ஆனால், உலக சமூகக் கலந்தாய்வு கூடத்தின் சாசன அறிக்கையோ, ''இக்கலந்தாய்வுக் கூடத்தில் பங்கு பெறும் உறுப்பினர்கள், வாக்கெடுப்பின் மூலமோ, ஒருமனதாகவோ, தீர்மானம் மூலமோ, நடைமுறைக்குச் செல்லும் முடிவினை எடுக்க வேண்டிய அவசியமில்லை'' எனக் கூறுகிறது. மேலும், அச்சாசனம் ''அரசின் பலாத்காரத்துக்கு எதிராக அஹிம்சை வழியில் மட்டுமே எதிர்ப்பைக் காட்ட வேண்டும்'' என நிபந்தனை விதிக்கிறது. மேலும், மறுகாலனி ஆதிக்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வரும் அமைப்புகள் இக்கலந்தாய்வுக் கூடத்தில் பங்கு கொள்ளத் தடை விதித்திருக்கிறது.

இதன் காரணமாக மெக்சிகோவில் மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வரும் சபாடிஸ்டா இயக்கமும், கொலம்பியாவைச் சேர்ந்த ஃபார்க் அமைப்பும்


படிப்பகம்

www.padippakam.com

சமூகக் கலந்தாய்வுக்கூட மாநாட்டில் கலந்து கொள்ள இயலாமல் தடை செய்யப்பட்டன.

அதே சமயம், 2003-ஆம் ஆண்டு மாநாட்டில் பிரான்சு மற்றும் இத்தாலி ஏகாதிபத்தியங்களின் அரசுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடியாளாகச் செயல்படும் ஐ.நா.வின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

உலக மயத்தை எதிர்ப்பதாகக் கூறும் உலக சமூகக் கலந்தாய்வுக் கூட மாநாட்டில், உலகமயத்தை ஆதரிக்கும் ஏகாதிபத்தியவாதிகள் கலந்து கொண்டு பேசுவது விசித்திரமான முரண்பாடாகத் தோன்றலாம். ஆனால், இது முரண்பாடல்ல.

ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற நோக்கமெல்லாம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குக் கிடையாது. ''சுய உதவி'' என்ற பெயரில் அடித்தட்டு மக்களைத் தனியார்மயத்திற்குப் பழக்கப்படுத்துவதுதான் அவர்களின் நோக்கம்.

எடுத்துக் காட்டாகச் சொன்னால், உலக வங்கியின் கட்டளைக்குக் கீழ்படிந்து அரசு கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களைக் கைகழுவினால், தன்னார்வக் குழுக்கள் அதற்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடாது. மாறாக, ஏகாதிபத்தியங்களிடம் பெறும் நிதியைக் கொண்டு, கிராமப்புறங்களில் சிறிய அணைக் கட்டுகளைக் கட்டிக் கொடுப்பார்கள்; விவசாய வேலை கிடைக்காதவர்களுக்கு ஏதாவது ஒரு கைத் தொழிலைக் கற்றுக் கொடுப்பார்கள். கிராமங்கள் தோறும் சுய உதவிக் குழுக்களை அமைத்து வங்கிக் கடனுக்கு ஏற்பாடு செய்வார்கள். இந்தச் சேவைகளின் மூலம், அரசுக்கு எதிரான, தனியார்மயம் - தாராளமயத்திற்கு எதிரான மக்களின் கோபத்தை மழுங்கடித்து விடுவார்கள். இந்த மோசடித்தனங்களை ''மக்கள் பங்கேற்பு'', ''அதிகாரப் பரவலாக்கம்'' போன்ற வார்த்தை ஜாலங்களால் மூடி மறைத்து விடுவார்கள்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மக்களை வர்க்க ரீதியாக அணி திரட்டுவதில்லை. அதே சமயம், தங்களை முற்போக்காகக் காட்டிக் கொள்ள புரட்சிகரமான வார்த்தைகளைப் பயன்படுத்தும் இக்குழுக்கள், வர்க்கப் போராட்டத்தையும் அறவே ஏற்றுக் கொள்வதில்லை. உலக சமூகக்

**நக்சல்பாரி புரட்சியாளர்களை ''சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்'' என முத்திரை குத்திய 'மார்க்சிஸ்டு'கள், இன்றைக்கு தங்களின் வாயாலேயே, ''நாங்கள் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்'', ''ஏகாதிபத்திய கைக்கூலிகள்'' என்ற உண்மையை ஒத்துக் கொண்டுள்ளனர்.**

கலந்தாய்வுக் கூடத்தில், ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் குழுக்களை அனுமதித்தால், மார்க்சிய அரசியலும், வர்க்கக் கண்ணோட்டமும் அமைப்புக்குள் புகுந்துவிடும் என்பதாலேயே ஆயுதமேந்திப் போராடும் குழுக்கள் கலந்து கொள்ளுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் இருந்து தன்னெழுச்சியாக எழும் போராட்டங்கள், புரட்சியாளர்கள் தலைமைக்குப் போய் ஆயுதப் போராட்டமாக வளர்ந்து விடக் கூடாது; அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்; அப்போராட்டங்களில் தலையிட்டு, அதை மழுங்கடித்து, நிறுவனமயமாக்கிவிட வேண்டும் என்பதுதான் தன்னார்வக் குழுக்களின் தலையாய நோக்கம். தனியார்மயத்தால் ஏற்படும் பிரச்சினைகளை, அரசோடு பேரம் நடத்துவது; சுய உதவிக் குழுக்களைக் கட்டியமைப்பது - ஆகியவை மூலம் இந்தச் சமூக - பொருளாதார அமைப்புக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் தன்னார்வக் குழுக்கள் சொல்லும் தீர்வு.

உதாரணத்திற்குச் சொன்னால், விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க கம்யூனிசப் புரட்சியாளர்கள் விவசாயப் புரட்சியை முன்வைத்த பொழுது, தன்னார்வக் குழுக்கள் பசுமைப் புரட்சியையே முன் வைத்தன. பசுமைப் புரட்சி நடுத்தர விவசாயிகளைக் கூடப் போண்டியாக்கிய பிறகு, இயற்கை வேளாண்மைக்குத் திரும்ப வேண்டும் என்கின்றன.

வாஜ்பாயிக்கு மதச்சார்பின்மை முகமூடி மாட்டப்படுவது போல, ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயம், மனிதநேய முகமூடியை மாட்டிக் கொள்ள வேண்டும் என்பதுதான் தன்னார்வக் குழுக்களின் கோரிக்கை. உலக வங்கி கொடுக்கும் கசப்பு மாத்திரைகளைப் பொடி பண்ணி, தேனில் கலந்து கொடுப்பது நல்லது என்பது தான் இக்குழுக்களின் நயவஞ்சக ஆலோசனை.

**சமரசமா? புரட்சியா?**

உலக சமூகக் கலந்தாய்வுக் கூடம், தனது மூன்று சர்வதேச மாநாடுகளையும் பிரேசில் நாட்டிலேயே நடத்திய பொழுதிலும், தனது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளுதற்காக பல்வேறு நாடுகளில் பிராந்திய மாநாடுகளையும் நடத்தி வருகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத் நகரில் ''ஆசிய சமூகக் கலந்தாய்வுக் கூடம்'' என்ற பெயரில் நடத்தப்பட்ட பிராந்திய மாநாட்டில், இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளும் கலந்து கொண்டனர்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளைப் போலவே, இந்தியத் துணைக் கண்டத்திலும், அதன் அண்டை நாடுகளிலும் மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள் பல்வேறு வழிகளில் நடந்து வருகின்றன. இப்போராட்டம் நேபாளத்தில் கம்யூனிஸ்டுகள் தலைமையில் ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இந்த எதிர்ப்பை நிறுவனமயமாக்கவும் அறுவடை செய்து கொள்ளவும் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றன.

மைய அரசின் உள்துறை அமைச்சகம் 2000-ஆம் ஆண்டில் அறிவித்த ஒரு புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவில் ஏறத்தாழ 20,000 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள், 1998-99-ஆம் ஆண்டில் 3,403 கோடி ரூபாயும்; அதற்கு அடுத்த ஆண்டில் 3,925 கோடி ரூபாயும், 2000-01 ஆம் ஆண்டில் 4,535 கோடி ரூபாயும் ஏகாதிபத்திய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுள்ளன. ஃபோர்டு பவுண்டேஷன் இந்தியாவிலுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வருடாவருடம் தரும் நன்கொடையை 110 கோடி ரூபாயில் இருந்து 220 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. ஏகாதிபத்திய நிறுவனங்கள் பிரதிபலனை எதிர்பாராமல், தர்மத்துக்காகவா இத்தனை ஆயிரம்


படிப்பகம்

கோடி ரூபாய்களை இந்தியாவில் கொட்டும்?

அடுத்த ஆண்டு சனவரி மாதம் மும்பயில் நடைபெறவுள்ள உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தின் நான்காவது மாநாடு 135 கோடி ரூபாய் செலவில் நடைபெறவுள்ளது. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐ.சி.சி.ஓ., பிரெடரிக் ஏபெர்ட் பவுண்டேஷன், நோவிப், ஃபோர்டு பவுண்டேஷன், ஆக்ஸ்ஃபோம் ஆகிய ஏகாதிபத்திய நிறுவனங்கள்தான் இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து, உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக வழங்கப் போகிறார்கள்.

சி.பி.எம். கட்சியின் அதிகார பூர்வ தத்துவ ஏடான ''மார்க்சிஸ்டு'' இதழில், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட, 'அந்நிய நன்கொடையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் தத்துவமும்' என்ற கட்டுரையில், ''தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அந்நிய நாட்டு நிறுவனங்களிடமிருந்து கோடிக் கணக்கில் நன்கொடை பெறுவதை இந்திய அரசு அனுமதிப்பது, ஏகாதிபத்தியங்கள் இந்த நாட்டை ஊடுருவதற்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாகும்'' எனக் குறிப்பிட்டிருந்தது. தற்பொழுது உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்திற்கு நன்கொடை அளிக்கும் அனைத்து ஏகாதிபத்திய நிறுவனங்களின் பெயர்களையும் குறிப்பிட்டு, அவற்றின் அபாயத்தையும் அம்பலப்படுத்தியிருந்தது. அதே 'மார்க்சிஸ்ட் கட்சி இன்று, ஏகாதிபத்தியங்களிடம் காசு வாங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் கை கோர்த்துக் கொண்டு, 'உலகமயத்தை' எதிர்க்க கூட்டணி கூட்டுகிறது.

'மார்க்சிஸ்டு' கட்சி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு கைகோர்த்துக் கொண்டு ஆசிய சமூகக் கலந்தாய்வுக் கூட மாநாட்டை ஹைதராபாத் நகரில் நடத்திய பொழுது, அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தாமஸ் ஐசக்,'' இன்றைய உலகின் புரட்சிகரப் போக்கு புதிய புதிய போராட்ட வடிவங்களை எடுத்து வருகிறது; இன்றைய உலகின் இந்த விதவிதமான போக்குகளை யார் புரிந்து கொள்ளவில்லையோ, அவர்கள்தான் உலக சமூகக் கலந்தாய்வுக் கூடத்தையும், போருக்கு எதிரான இயக்கங்களையும் ஏகாதிபத்தியங்களின் சதி எனக் குற்றஞ்சாட்டுவார்கள். அவர்கள் சமகாலத்திய உலகின் புரட்சிகரப் போக்கைப் புரிந்து கொள்ளவில்லை''



**தனியார்மயத்தை எதிர்த்து தில்லியில் விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்: இந்த எதிர்ப்பை மழுங்கடிப்பதுதான் போலிகளின், கைக்கூலிகளின் குறி.**

என ஃபிரண்ட்லைன் இதழுக்கு பேட்டியளித்தார்.

நக்சல்பாரி புரட்சியாளர்களை ''சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்'' என முத்திரை குத்திய 'மார்க்சிஸ்டு'கள், இன்றைக்கு தங்களின் வாயாலேயே, ''நாங்கள் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்'', ''ஏகாதிபத்திய கைக்கூலிகள்'' என்ற உண்மையை ஒத்துக் கொண்டுள்ளனர். 'மார்க்சிஸ்டு'களின் அரசியல் நடவடிக்கைகளுக்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவைக்கும் இடையே எவ்வித வேறுபாடும் கிடையாது என்பதுதான் இன்றைய உண்மை.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏகாதிபத்திய தர்ம நிறுவனங்களிடம் கையேந்துகின்றன எனில், 'மார்க்சிஸ்டு' களோ, தாங்கள் ஆளும் மாநிலங்களில், அந்நிய மூலதனத்துக்காகப் பன்னாட்டு நிறுவன முதலாளிகளிடம் கையேந்துகின்றனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் போலவே, வர்க்க அரசியலோ, வர்க்கக் கண்ணோட்டமோ இன்றி அறிவொளி இயக்கம், அறிவியல் மையம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் போன்ற 'சேவை' அமைப்புகளைக் கட்டியுள்ளனர். தன்னார்வக் குழுக்களைப் போலவே, 'மார்க்சிஸ்டு'களும் ஏகாதிபத்திய எதிர்ப்பில் வரம்பை மீறிச் செல்வதில்லை. 'மார்க்சிஸ்டு'களின் தனியார்மய எதிர்ப்பு கூட, வேலையைப் பறிக்காதே, போனசு கொடு என சுயநலப் பொருளாதாரவாதச் சேற்றுக்குள் சிக்கிக் கொண்டு விட்டது. இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்க்க, 'மார்க்சிஸ்டு'களுக்கு காங்கிரசின் முதுகு தேவைப்படுவதைப் போல, ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அவர்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் முதுகு தேவைப்படுகிறது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்த்த பார்ப்பன ஜெயாவிற்கு மதச்சார்பற்ற முலாம் பூசியதைப் போல, உலகமயத்தை எதிர்ப்பதாக நாடகமாடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு முலாம் பூசுகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். எதிரிகளை விட இத்துரோகிகள்தான் மிகவும் அபாயகரமானவர்கள்.

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டம் என்பது, ஏகாதிபத்தியங்களோடு அற்ப சலுகைகளுக்காக நடத்தப்படும் பேரம் அல்ல; மாறாக, ஆயுதம் ஏந்திப் போராடுவது உட்பட அனைத்து வழிகளிலும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும், உள்நாட்டு தரகு முதலாளிகளின் அரசையும் தூக்கியெறியப் போராடுவதாகும்.

உலகமய எதிர்ப்பு என்ற பெயரில் நாடகமாடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், அவர்களோடு கை கோர்த்துக் கொண்டுள்ள போலி கம்யூனிஸ்டுகளையும் அம்பலப்படுத்தி முறியடித்தால்தான், மக்களின் போராட்டங்களை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்ல முடியும். மாறாக, அந்த முகாமில் உள்ள முற்போக்கு சக்திகளை வெல்வது என்ற பெயரில் கூட்டணி வைத்துக் கொண்டால், அது சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்திக்கும், காங்கிரசுக்கும் போலி கம்யூனிஸ்டுகள் வால் பிடித்த கதையாகத்தான் முடியும்.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் போராட்டத்திற்கு எதிராக புலிகள்

கடந்த செப்டம்பர் மாதத்தில் இலங்கையை உலுக்கிய சுகாதாரத் துறை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் எதிரிகள், துரோகிகள், நண்பர்கள் யார்யார் என்பதை உழைக்கும் மக்களுக்கு இனம் பிரித்துக் காட்டி விட்டது.

உலக வங்கி கைக்கூலியான ஆளும் யு.என்.பி. அரசு, பட்ஜெட்டில் சேவைத்துறைகளுக்கான மானியங்களை வெட்டி தனியார்மய - தாராளமயமாக்கலைத் தீவிரப்படுத்தி வருகிறது. அதன் விளைவாக தீவிரமாகிவிட்ட விலைவாசி உயர்வினால் திண்டாடும் சுகாதாரத்துறை ஊழியர்கள், சம்பளஉயர்வு மற்றும் பிற சலுகைகளைக் கோரி பலமுறை போராடிய பிறகு, இறுதியாக கடந்த செப்.17 முதலாக நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். மருத்துவப் பணியாளர்கள், எழுத்தர்கள், வாகன ஓட்டுநர்கள், பொதுச்சுகாதாரப் பணியாளர்கள், மருத்துவ தாதியர் - என 54 பிரிவுகளைச் சேர்ந்த 80,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இம்மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆளும் யு.என்.பி. அரசு பாசிச ஜெயாவின் வழியில் மிருகத்தனமாக ஒடுக்கியது. கஜானா காலியாகிவிட்டது என்று கை விரித்த இலங்கை அரசு, இப்போராட்டத்தால் மருத்துவமனைகளிலுள்ள நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவதூறுப் பிரச்சாரம் செய்தது. அரசு ஆதரவு "டெய்லி மிரர்" என்ற பத்திரிகை, போராட்டத்தை ஒடுக்க தமிழகத்தில் ஜெயா அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பின்பற்றக் கோரியது. கடும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்; நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் எதிர்போராட்டம் நடத்த வேண்டும் என்று ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் பாசிச அடக்குமுறையை வெளிப்படையாக ஆதரித்து நின்றன.

போராட்டத்துக்கு முதல் நாளிலிருந்தே மருத்துவமனைகளில் போலீசார் குவிந்து, தொழிற்சங்கக் கூட்டம் நடத்தக் கூட விடாமல் ஊழியர்களைத் துரத்தியடித்தனர். முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு பலர் பழிவாங்கப்பட்டனர். சுகாதார அமைச்சகம் 16,000 தற்காலிக ஊழியர்களை திடீரென வேலை நீக்கம் செய்து அச்சுறுத்தியது. அந்தப் பணிகளுக்கு புதிதாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். அனைத்து மருத்துவமனைகளிலும் இராணுவத்தின் முப்படைகளும் குவிந்து முற்றுகையிட்டன. அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது இன - மொழி - மத வேறுபாடுகளைக் கடந்து வர்க்கம் என்ற ரீதியில் ஓரணியில் திரண்டு உறுதியாக இப்போராட்டத்தை நடத்தினர்.

விடுதலைப் புலிகளோ, போராடும் சுகாதார ஊழியர்களுக்கு ஆதரவு காட்டவோ, பாதுகாக்கவோ முன்வரவில்லை. மாறாக, இனவெறி பாசிச யு.என்.பி. அரசுக்கு ஆதரவாக நின்று போராட்டத்தின் முதுகில் குத்தினர். செப்.23 அன்று யாழ்ப்பாண அரசு பெரிய மருத்துவமனையில் கூட்டம் நடத்திய புலிகள், மனிதாபிமான அடிப்படையில் இப்போராட்டத்தைக் கைவிடுமாறு எச்சரிக்கை விடுத்தனர். அரசாங்கம் மற்றும் ஆளும் வர்க்க பத்திரிகைகளின் கருத்தை கிளிப்பிள்ளை போல எதிரொலித்தனர். யாழ் பிராந்திய புலித்தலைவரான இளம்பிறை, போராடும் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாக பணிக்குத் திரும்ப வேண்டும்; இல்லையேல் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு, புலித் தொண்டர்கள் அப்பணிகளைச் செய்வார்கள் என்று வெளிப்படையாகவே எச்சரிக்கை விடுத்தார். வவுனியாவில் உள்ள புலித்தலைவர், உள்ளூர் மருத்துவமனைக்கு புலித் தொண்டர்களை அனுப்பி போராட்டத்தை உடைக்கும் திருப்பணியைச் செய்தார். வல்வெட்டித்துறை, காங்கேசன் துறை முதலான பல பகுதிகளிலும் இதேபோல் எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் கருங்காலித்தனங்களும் நடந்துள்ளன. இருப்பினும் புலிகளை எலிகளாக மதித்து, சுகாதார ஊழி

**புலிகளின் போலீசுப் படை: தமிழின உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கா? அல்லது மக்கள் போராட்டங்களை ஒடுக்கி அச்சுறுத்துவதற்கா?**



www.padippakam.com

யர்கள் தமது போராட்டத்தை உறுதியுடன் தொடர்ந்தனர்.

தமிழ் மருத்துவமனைகளில் சிங்கள இராணுவம் புகுந்து முற்றுகையிட்டதை வாயளவில் கூட புலிகள் எதிர்க்கவில்லை. ''போராடும் தமிழனை ஒடுக்க நீ யாரடா நாயே?'' என்று இன உணர்வோடு வீரவசனம் கூட பேசவில்லை. மாறாக, சிங்கள இராணுவத்தின் முற்றுகையையும் அச்சுறுத்தல் - அடக்குமுறைகளையும் கைகட்டி நின்று புலிகள் விசுவாசமாக ஆதரித்துள்ளனர். சிங்கள பாசிஸ்டுகளோடு சேர்ந்து கொண்டு தமிழின உழைக்கும் மக்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்கும் துரோகிகளாகச் செயல்பட்டுள்ளனர். இந்த உண்மைகளை சுகாதாரப் பணியாளர்களின் தொழிற்சங்கக் கூட்டணி (HSTUSA) தனது அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளது. புலிகளும் இதற்கு மறுப்பு எதுவும் இதுவரை தெரிவிக்கவுமில்லை. ஆளும் யு.என்.பி. அரசாங்கத்தின் பாசிச அடக்குமுறை, தொழிற்சங்கங்களின் அரசியலற்ற கையாலாகாத்தனம், புலிகளின் கருங்காலித்தனம் ஆகியவற்றால், 13 நாட்களுக்கு உறுதியுடன் நடந்த சுகாதாரத்துறை ஊழியர்களின் போராட்டம் எந்தக் கோரிக்கையும் நிறைவேறாமல் விலக்கிக் கொள்ளப்பபட்டு விட்டது. இருப்பினும் குமுறிக் கொண்டிருக்கும் ஊழியர்களும் தொழிலாளர்களும் இத்தோல்வியிருந்து பாடங்களைப் பெற்று அடுத்தடுத்த போராட்டங்களில் நிச்சயம் வெற்றியைச் சாதிப்பார்கள்.

புலிகளின் இலட்சியம் தமிழின உழைக்கும் மக்களின் உரிமையும் விடுதலையுமல்ல; மாறாக, தமிழினத் தரகுப் பெருமுதலாளிகளின் நலன்களுக்கானது. அதற்காக சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டு உழைக்கும் மக்களின் போராட்டங்களை ஒடுக்கவும் முதுகில் குத்தவும் அவர்கள் தயங்க மாட்டார்கள். அன்னிய முதலீட்டுக்கு ஆதரவு, உழைக்கும் மக்கள் மீது ஒடுக்குமுறை என்ற கொள்கையைச் செயல்படுத்தும் போலீசுக்காரன் வேலையைத்தான் இப்போது புலிகள் செய்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாத தேசியம் பேசும் எந்தவொரு தேசிய இன விடுதலை இயக்கமும் எங்கேபோய் நிற்கும் என்பதை புலிகளின் நடவடிக்கை மீண்டும் நிரூபித்துக் கட்டிவிட்டது.

● குமார்

### கிடா வெட்டும் போராட்டம்:

# “பார்ப்பனியத்தைப் பலி போடுவோம்!”

“கிடா கேட்குது நம்ம குலதெய்வ சாமி, அதுக்கு தடா போடுது ஜெயா மாமி! சாமி பேச்சை கேட்பியா, மாமி பேச்சை கேட்பியா?'', ''தடை செய் தடை செய்! தமிழ்நாட்டு கோயில்களில் சமஸ்கிருத வழிபாட்டைத் தடை செய்'', ''கிடா வெட்டுத் தடைச் சட்டம் குலதெய்வக் கோயில்களில் பார்ப்பானை வைக்கும் சதித்திட்டம்''

தமிழகம் முழுக்க இப்படி பார்ப்பன பாசிஸ்டு ஜெயலலிதா அரசின் கிடா வெட்டும் தடையை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் புயலெனப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

மதுரை-உசிலம்பட்டி, திருமங்கலம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி அக்டோபர் மாதம் தொடர் பொதுக்கூட்டங்கள் நடத்தி, அதன் தொடர்ச்சியாக கிடா வெட்டும் போராட்டத்தை அறிவித்தது.

''பார்ப்பான் என்றும் பிராமணன் என்றும் ஐயர் என்றும் அழைக்கப்படும் பூணூல் கும்பலுக்கு மாட்டுக்கறி தின்ற அடையாளமாக சிங்கப்பல் இருந்தாலும், கருவாடு கூடத் திங்க மாட்டேன் என்று ஜீவகாருண்யம் பேசுகிறார்கள்'' என்ற பிரச்சாரம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

பார்ப்பனக் கும்பலின் கிடா வெட்டும் தடையால் உழைக்கும் மக்களின் தெய்வங்கள் சோர்ந்து போய் நாக்கு செத்துக் கிடக்கின்றன. கத்தியைத் தூக்கிப் பிடித்துக் கண்ணை உருட்டிக் கொண்டு காவல் காத்துக் கொண்டிருக்கும் ஐயனார் இனி, கத்தியைக் கடாசிவிட்டு சிறீரங்கம் ரங்கநாதர் மாதிரி சோம்பேறியாகப் படுத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சோம்பேறி பார்ப்பனர்கள், குலதெய்வக் கோயிலுக்குள் நுழைந்தால் முனீஸ்வரன் சாமியும் சோம்பேறி சாமியாக ஆகிவிடும். அது மட்டுமல்ல, திணவெடுத்துப் போய் ஏராளமான வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டு களி வெறியாட்டத்தில் ஈடுபடும். ஏனெனில், பார்ப்பன சாமிகளின் வரலாறு இதுதான்.

எனவே, சாமி கிடா கேட்கிறதா இல்லையா என்பதல்ல இங்கு விசயம். கிடா வெட்டைத் தடைசெய்வதன் மூலம் பார்ப்பனக் கும்பல் என்ன சொல்லுகிறது, அதன் மூலம் என்ன செய்ய போகிறது என்பதுதான் முக்கியம்.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளைக் கடித்த கதையாக தடா, பொடா, எஸ்மா, டெஸ்மா என்பது மட்டுமல்ல, ஜீவகாருண்ய சட்டம், பசுவதைத் தடுப்புச் சட்டம், மதமாற்றத் தடைச் சட்டம், கிடாவெட்டுத் தடைச் சட்டம் என்று பார்ப்பன பயங்கரவாதிகள் கொண்டுவந்துள்ள சட்டங்களைப் பார்த்துக் குலதெய்வங்களும் குலை நடுங்கிக் கொண்டுள்ளன.

அக்டோபர் 11-ந் தேதி. முண்டுவேலம்பட்டி காளியம்மன் கோவில் முன் கிடா வெட்டு தடைச் சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த போலீசு அனுமதி மறுத்தது. இதை ஏற்கனவே எதிர்பார்த்த வி.வி.மு. தோழர்கள் அவசரமாகக் கூடி, 12-ந் தேதி போராட்டம் நடக்கும் என்று பிரச்சாரம் செய்து சுவரொட்டிகளை ஒட்டினர்.

மக்களிடம் இப்பிரச்சாரம் தீயாகப் பரவியது. ''பொங்கல் வைத்துக் கிடா வெட்டப் போகிறோம்'' என்று மக்கள் பெரும் உற்சாகத்துடன், 12ந் தேதி காலை 8 மணிக்கெல்லாம் கோவிலில் பொங்கல் வைக்க ஆரம்பித்தனர். கூட்டம் அலைமோதியது. செய்தி அறிந்து போலீசு பெரும் பதட்டத்துடன் ஓடிவந்தது. ''போராட்டம் நடக்கப் போகிறது; கலைந்து விடுங்கள்'' என்று மக்களை மிரட்டியது. மக்கள், ''இது எங்க ஊரு, எங்களை அங்க போ, இங்க போ என்று மிரட்டாம, நீங்கள் ஒதுங்கி போங்கள்'' என்றனர். பொங்கல் பொங்கியது. பெண்கள் குலவையிட்டனர். குழந்தைகள் மணியடித்தனர். போலீசு பலி ஆடுகள் மாதிரி செய்வதறியாது இங்கும் அங்கும் ஓடியது.



படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம், ஊரின் காலனிப் பகுதியிலிருந்து கிடாயுடன் ஊர்வலம் கோயிலை நோக்கி வந்தது. முழக்கமிட்டபடி முன்னேறியவர்களை, போலீசு படை தடுத்து 27 பேரைக் கைது செய்தது. ஆத்திரம் அடைந்த கிராம மக்கள் கைது செய்தவர்களை விடுவிக்கக் கோரி போலீசாரிடம் கடும் வாக்குவாதத்தில் இறங்கினர். வேடிக்கைப் பார்த்தவர்களை விரட்டியடித்த போலீசை எதிர்த்தனர். ''எங்க கோவிலில் நாங்கள் நேர்த்தி கடன் செய்ய தடைச் சட்டம் போடுவது யார்? மீண்டும் 14-ந் தேதி விழா நடத்தி கிடா வெட்டுவோம்'' என்றனர்.





**முண்டுவேலம்பட்டியில் வி.வி.மு.வின் கிடா வெட்டும் போராட்டம்; இந்துவெறி பாசிசத்திற்கு எதிரான போராட்டக் கால்கோள் விழா. (மேலே) போராட்டத்தை ஒடுக்கி முன்னணியாளர்களைக் கைது செய்ய வரும் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் விவசாயிகள். (கீழே)**

கைது செய்யப்பட்டவர்களுக்கும் கிடாவுக்கும் மாலை விடுதலை கிடைத்தது. தோழர் சிவகாமு தலைமையில் போராட்டக்காரர்கள் திரும்பவும் கிடாவுடன் ஊருக்குள் ஊர்வலம் சென்றது. மக்களுக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்தது. கிடா வெட்டு போராட்டத்தில் கலந்து கொண்ட முண்டு வேலம்பட்டி கிராம மக்கள் கொதிப்புடன், ''ஜெயலலிதா குருவாயூருக்கு யானை காணிக்கை கொடுக்கலாம்; மகாமக குளியல் நடத்திப் பலரை கொல்ல லாம்; ஆனால், நாங்கள் ஆடு, கோழி காணிக்கை கொடுத்தால் தவறா?'' என்றனர்.

பொன்னுதாய் என்பவர், ''நாங்கள் குழந்தை பெற்றால் மொட்டை எடுத்துக் கிடாவைக் காணிக்கையாகப் பலியிடுவோம். இது போன்ற விசேச நிகழ்ச்சிகளில் குடும்பமே சந்தோசமாக இருக்கும். இதெல்லாம் ஜெயலலிதாவுக்கு முடியாது என்பதால் தடை விதிக்கிறார்'' என்றார் ஆவேசமாக.

போராட்டம் என்றால், முன்னணியாளர்கள் சிலர் முழக்கமிட்டு கைதாவதுதான் ஓட்டுக் கட்சிகளின் மரபு. ஆனால், மொத்தமாக ஊரே திரண்டு போராட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டதும், அதைப் பருண்மையாக நடைமுறைப்படுத்தியதும், அதற்கு எதிராக நின்ற தடைகளையும், போலீசையும் தீரத்துடன் கடைசிவரை எதிர்த்ததும், உண்மையிலேயே, புரட்சி என்பது மக்கள் திருவிழா என்பது நிருபணமானது.

ஒடுக்கப்பட்ட மக்களை மட்டுமல்ல, அவர்களின் தெய்வங்களைக் கூட பார்ப்பன கும்பல் இதுநாள் வரையில் புறக்கணித்தது. மாடன், காடன், மாயன், சுடலை, கருப்பு, முனி, காத்தாயி, வீராயி ஆகிய தெய்வங்களைக் கடவுளாக அங்கீகரிக்காமல் அவமதித்தது. அசுரர்கள், அரக்கிகள் என்று ஊரை விட்டு தள்ளி வைத்தது. ஆனால், இப்போது சுடலை மாடனையும் தனது அடியாளாக மாற்றப் பார்க்கிறது, பார்ப்பன கும்பல். ''கிடா வெட்டி அசிங்கப்படுத்தாதீர்கள், நான் துளசி மாலை சாத்தி சுத்தமாக வைத்திருக்கிறேன்'' என்று கரிசனத்தோடு சொல்கிறது.

எனவே, கிடா வெட்டும் போராட்டம் என்பது, ஏதோ தெய்வத்துக்கு காணிக்கை செலுத்தும் விவகாரமல்ல; பார்ப்பன பண்பாட்டு ஆதிக்கத்திற்கெதிராக கணக்கு தீர்க்கும் போராட்டம்.

பார்ப்பன கும்பலும் மெத்தப்படித்த ஞானிகளும் சொல்வதுபோல், கிடா வெட்ட தடை என்பது மூட நம்பிக்கை ஒழிப்போ, ஜீவ காருண்ய விவகாரமோ அல்ல. சிறுபான்மையான பார்ப்பன பண்பாட்டை, இந்து வெறி பாசிசத்தை சமுதாயமயமாக்கும் சதி.

கொலை, ரத்தம், கறி விரும்பிகள் என்று உழைக்கும் மக்களை காட்டுமிராண்டிகள் போல் சித்தரிப்பது. மனித கறிக்கு அலையும் பார்ப்பன பாசிஸ்டுகளின் நரித்தனமாகும். கண்ணுக்குத் தெரியாமல் காற்றில் கலந்திருப்பதைப் போன்றதுதான் இந்திய கலாச்சாரம் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படும் இந்து மத கலாச்சாரத்திற்கெதிராக உழைக்கும் மக்கள் கண்டு பிடித்த முறிப்பு மருந்துதான், கிடாவெட்டும் போராட்டம்! அது பற்றிப் படர்வதை ஒருக்காலும் பார்ப்பன கும்பலால் தடுக்க முடியாது.

● குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com



## பழங்குடியினரின் நில உரிமைப் போர்

''நாங்கள் கனவு காண்கிறோம்
எங்களின் ஒவ்வொரு கனவிலும்
எங்கள் நிலத்தைக் கனவு காண்கிறோம்
எங்கள் நிலத்தில் வாழவில்லையெனில்
நாங்கள் மரணத்தைத் தழுவுகிறோம்''

– தர்கேரா ஆதிவாசிப் பாடல், ஒரிசா.
(''கடவுளுக்கு முன் பிறந்தவர்கள்'',
இந்திரன், ஐ.என்.டி.பி. வெளியீடு)

உண்மைதான்! ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள பச்வாரா பஞ்சாயத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் தங்கள் நிலங்களைப் பாதுகாப்பதற்காக மரணத்தைத் தழுவவும் தயாராக ஆயுதமேந்தி களமிறங்கியுள் ளனர். மைய அரசுக்கு எதிராகவும் கிழக்கத்திய தாதுப் பொருட்கள் வர்த்தக நிறுவனம் மற்றும் பானெம் (PANEM) ஆகிய தனியார் நிறுவனங்களுக்கு எதிராகவும் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

2001-ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநில மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் அமைக்கும் உரிமத்தை வழங்கிய மைய அரசு, இத்தேவைக்கான நிலங்களைக் கையகப்படுத்தி பஞ்சாப் மின்வாரியத்துக்கு வழங்குமாறு ஜார்கண்ட் மாநில அரசுக்கும் உத்தரவிட்டது. இதனடிப்படையில் ஜார்கண்ட் அரசு ஒதுக்கிய நிலம், 13 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள பச்வாரா பஞ்சாயத்தின் ஒன்பது கிராமங்களாகும். இக்கிராமங்களில் வாழும் ஏறத்தாழ 50,000-க்கும் மேற்பட்ட சந்தால் மற்றும் பகாரியா பழங்குடியின மக்களின் எதிர்கால வாழ்வு இன்று கேள்விக் குறியாகி விட்டது. இப்பகுதியில் தான் சுமார் 56 கோடி டன் நிலக்கரி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கனிம வளமிக்க இப்பகுதியைக் கைப்பற்றிச் சூறையாட தனியார் - அந்நிய முதலாளிகள் துடிக்கின்றனர். அற்ப நிவாரணத் தொகை அளித்து பழங்குடியினரை இப்பகுதியிலிருந்து விரட்டியடிக்க ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர்.



வெட்டரிவாளை ஏந்தி நிலத்திற்காகவும் வாழ்வுரிமைக்காகவும் போராடும் பழங்குடியினப் பெண்கள்.

ஏற்கெனவே உள்ள ''சந்தால் பர்கானா (கிராமத் தலைமை) குத்தகைச் சட்டத்''தின்படி, கிராம சபையின் ஒப்புதலின்றி பழங்குடியினர் அல்லாதவர்களுக்கோ, அரசுக்கோ இந்நிலங்களை விற்க முடியாது. 1977-ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி பழங்குடியினரின் நிலங்களை அந்நியர்கள் வாங்கவோ, பயன்படுத்தவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சட்டங்களையும் தடைகளையும் குப்பைக் கூடையில் வீசிவிட்டு, தனியார் கூட்டு மூலதன நிறுவனமான ''பானெம்''-க்கும் கிழக்கத்திய தாதுப் பொருட்கள் விற்பனை நிறுவனத்துக்கும் வளமான பூமியைத் தாரை வார்க்க, பஞ்சாப் மின்சாரத் துறையின் பெயரால் ஆட்சியாளர்கள் திட்டமிட்டே சதி செய்து வருகின்றனர்.

இந்த உண்மையை உணர்ந்துள்ள பழங்குடியின மக்கள், கடந்த ஆண்டில் அரசு அதிகாரிகள் நைச்சியமாக பேச்சு வார்த்தை என்ற பெயரில் சந்தால் மற்றும் பகாரியா பழங்குடியினரின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சித்தபோது, ஓரணியாய் திரண்டு அவர்களை முற்றுகையிட்டு எச்சரித்தனர். ''இனி நிலங்களைக் கையகப்படுத்த வரவே மாட்டோம்'' என்று அவர்களிடம் எழுதிவாங்கிக் கொண்டு விரட்டியடித்தனர். இந்த அதிகாரிகள் போலீசாரிடம் புகார் கொடுத்ததன் அடிப்படையில் 11 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அந்நியர் எவரும் கிராமங்களுக்குள் நுழையக் கூடாது என்று தடைவிதித்த பழங்குடியினர், சோதனைச் சாவடிகளை நிறுவி வில் - அம்பு, கோடாரி, அரிவாளுடன் காவல் காக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த செப். 30-ஆம் தேதியன்று, மாவட்ட உதவி ஆணையர், ''மக்கள் சபை'' என்ற பெயரில் பழங்குடியினரைக் கூட்டி அவர்களது குறைகளைக் கேட்கப் போவதாக அறிவித்தார். மீண்டும் சதிகாரர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயற்சிப்பதை அறிந்த பழங்குடியின மக்கள், திரண்டெழுந்து தமது எதிர்ப்பைக் காட்டத் தீர்மானித்தனர். பீதியடைந்த உதவி ஆணையர் அக்கூட்டத்தையே ரத்து செய்துவிட்டு தப்பியோடி விட்டார்.

''ஒரு ஏக்கருக்கு ரூ. 50,000 வீதம் கொடுத்து எங்களை விரட்டியடிக்க பானெம் நிறுவனமும் அரசும் முயற்சிக்கின்றன. அது ஒருபோதும் நடக்காது. தனியார் - அந்நிய முத



படிப்பகம்

www.padippakam.com



லாளிகளின் பகற் கொள்ளைக்கு எங்கள் பூமியை ஒருக் காலும் விட்டுக் கொடுக்க மாட்டோம். இது சந்தால் பழங்குடியின் சொத்து. எங்கள் நிலத்தில் நாங்கள் வாழ, எங்கள் உயிரையும் தியாகம் செய்வோம்'' என்று கிராமத் தலைவர்கள் சூளுரைக்க, நூற்றுக்கணக்கில் திரண்ட பழங்குடியினப் பெண்கள் கையிலே அரிவாள்களை ஏந்தியபடி மத்திய - மாநில அரசுகளுக்கு எதிராக அன்று முழக்கமிட்டனர். பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு நாட்டையே கூறுபோட்டு இந்துவெறி ஆட்சியாளர்கள் விற்றுக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், தமது நிலத்திற்காகவும் வாழ்வுரிமைக்காகவும் போர்க்குணத்துடன் ஓரணியில் திரண்டு போராடி வரும் சந்தால் பழங்குடியின மக்கள், நாட்டுக்கும் மக்களுக்கும் முன்னுதாரணமிக்க போராட்ட திசைவழியைக் காட்டியுள்ளனர்.

## பரிசோதனைப் பிராணிகளாக ''புள்ளி ராஜா''க்கள்

திரும்பும் இடமெல்லாம் ''புள்ளி ராஜாவுக்கு எயிட்ஸ் வருமா?'' என சுவரொட்டிகளும் விளம்பரப் பலகைகளும் வைத்து அரசும் தன்னார்வக் குழுக்களும் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளன. அதேநேரத்தில் இத்தகைய பரபரப்பும் விளம்பரமுமின்றி, இந்தியர்களையே பரிசோதனைப் பிராணிகளாக்கி எயிட்ஸ் தடுப்பூசிக்கான முதற்கட்ட பரிசோதனை ஏற்பாடுகளும் தொடங்கி விட்டன.

''திரியான் உயிரியல் நிறுவனம்'' என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம், எயிட்ஸ் நோய்க்கான தடுப்பூசி ஒன்றை சோதனை நிலையில் கண்டறிந்துள்ளது. இந்தியாவின் 'குறிப்பிட்ட தேவைகளையொட்டி' தயாரிக்கப்பட்டுள்ள இத்தடுப்பூசிக்கான ஆராய்ச்சியில் கொல்கத்தாவிலுள்ள தேசிய காலரா மற்றும் தொற்றுநோய்த் தடுப்பு நிறுவனத்தை (NICED)ச் சேர்ந்த சேகர் சக்ரவர்த்தி என்ற விஞ்ஞானியும் பங்கேற்றுள்ளார்.

புனேயிலுள்ள தேசிய எயிட்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தில் 2004 மார்ச் மாதத்தில் இத்தடுப்பூசியைக் கொண்டு முதற்கட்ட பரிசோதனைகள் நடத்தப்பட உள்ளன. இப்பரிசோதனைக்காக 18 முதல் 50 வயது வரையிலான 13 பேர் சேர்க்கப்படுவர். எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படாத இவர்களின் உடலில் சோதனை நிலையிலுள்ள தடுப்பூசி செலுத்தப்படும். பின்னர் எயிட்ஸ் கிருமிகளின் தாக்குதலில் இத்தடுப்பூசி எவ்வாறு வேலை செய்கிறது என்று சோதிக்கப்படும்.

அனைத்து நாடுகளும் பொதுவில் ஏற்றுக் கொண்டுள்ள நடைமுறையின்படி, ஒரு தடுப்பூசிக்கான முதற்கட்ட பரிசோதனை, அத்தடுப்பூசி கண்டறியப்பட்ட நாட்டிலேயே நடத்தப்பட வேண்டும். ஆனால், அமெரிக்க நிறுவனம் கண்டறிந்துள்ள எயிட்ஸ் தடுப்பூசிக்கான முதற்கட்ட பரிசோதனை, அமெரிக்காவில் நடத்தப்படாமல் இந்தியாவில் நடத்தப்படுகிறது. இதற்காக இந்தியர்கள் பரிசோதனைப் பிராணிகளாக்கப்பட்டுள்ளார்கள். எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படாதவர்கள் மட்டுமின்றி, விபச்சாரிகள், லாரி ஓட்டுநர்கள், விடலைப் பருவத்தினர் - எனப் பலரையும் இச்சோதனைக்கு உட்படுத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.




## ''கோட்டு - சூட்டு'' போட்ட பயங்கரவாதிகள்

அக்டோபர் 3-ஆம் நாள், போனசுக்காகவும் புதிய சம்பள உயர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரியும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரியும் மும்பையிலுள்ள டாடா நிறுவனத் தலைமையகம் எதிரே தொழிலாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர். அவர்களோடு ஆனந்த் தால்வி, அக்தர் கான் எனும் இரு தொழிலாளிகளும் முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும் கடந்த 7 ஆண்டுகளாக வேலையிழந்து பரிதவிக்கும் டாடா நிறுவனத் தொழிலாளிகள். வறுமையில் தத்தளித்து விரக்தியின் விளிம்புக்கே சென்ற அவர்கள், எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை உலகம் அறியட்டும் என்று கூறியபடியே உடலெங்கும் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீயிட்டுக் கொண்டனர். சக தொழிலாளிகள் அவர்களைத் தடுத்து காப்பாற்ற முயன்ற போதிலும், தால்வி உயிரோடு எரிந்து கரிக்கட்டையாகி விழுந்தார். அக்தர்கான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அடுத்த சில நாட்களில் மாண்டு போனார்.

இவ்விரு தொழிலாளர்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்கிறது அரசும் டாடா நிறுவனமும். இல்லை; இது தற்கொலை இல்லை. தரகுப் பெருமுதலாளி டாடா செய்த படுகொலை!

மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான ஆனந்த் தால்வி, டாடா எலக்ட்ரிக் கம்பெனியில் 19 ஆண்டு காலம் பியூனாக வேலை செய்தவர். ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையான அக்தர்கான், 18 ஆண்டுகளுக்கும் மேலாக துரப்பணத் தொழிலாளியாக வேலை செய்தவர். ஆனாலும் அவர்கள் நிரந்தரத் தொழிலாளிகளாக்கப்படாமல் அற்பக் கூலிக்கு ஒப்பந்தத் தொழிலாளிகளாகவே இருத்தி வைக்கப்பட்டனர். 1996-ஆம் ஆண்டில் டாடா நிர்வாகம் இத்தொழிலாளிகளை ஒப்பந்தக் கூலிகளாகக் கூட வைத்துக் கொள்ளாமல் வேலை நீக்கம் செய்து வீதியிலேயே வீசியெறிந்தது.

டாடா ஹைட்ரோ கம்பெனி தொழிலாளர் சங்கம், இத்தொழிலாளிகள் சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தொழிலாளர் ஆணையத்திடம் முறையிட்டு நீதிமன்றத்திலும் மனு செய்தது. இத்தொழிலாளிகளை வேலைநீக்கம் செய்யாமல் மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் சட்டப்படி செயல்படுமாறும் டாடா நிர்வாகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனாலும் டாடா நிர்வாகம் அதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. கடந்த ஏழாண்டுகளாக வேலையிழந்து, வாழும் உரிமையும் இழந்து கோர்ட்டும் தொழிற்சங்கமுமாக அலைந்து விரக்தியடைந்த இத்தொழிலாளிகள், தமது குமுறலை இம்மரணத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

தால்வி, கான் மட்டுமல்ல; இன்னும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் டாடா நிறுவனத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு வாழ்விழந்து நிற்கிறார்கள். டாடா மட்டுமின்றி பல்வேறு தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களிலிருந்து வேலை நீக்கம், கட்டாய ஓய்வு, லே-ஆஃப், ஆலைமூடல், சிக்கன சீரமைப்பு முதலானவற்றால் வேலை

www.padippakam.com



யிழந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பரிதவிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோருக்கு இன்னமும் சம்பளப் பாக்கி கூட கிடைக்கவில்லை. கடந்த சில ஆண்டுகளில் மோடி ஸ்டோன், இந்துஸ்தான் லீவர், காமெனி மெட்டல்ஸ் ஆகிய பெருமுதலாளித்துவ நிறுவனங்களிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளிகளில் ஏறத்தாழ 15 பேர் வறுமையால் மாண்டு போயுள்ளனர்.

தனியார்மய - தாராளமயக் கொள்கையால் முதலீடுகள் பெருகும்; அதன் விளைவாக வேலை வாய்ப்புகள் பெருகும் என்று ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசினர். ஆனால், கடந்த பத்தாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலையற்றோரின் எண்ணிக்கை 3 கோடியே 45 லட்சத்திலிருந்து 4 கோடியே 5 லட்சமாக அதிகரித்து விட்டது. 1988 - 93 வரையிலான காலத்தில் 2.37% ஆக இருந்த வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் 1994-2000 வரையிலான காலத்தில் 0.98% ஆக சுருங்கி விட்டது. மறுபுறம், பெருமுதலாளிகளின் பகற்கொள்ளைக்கும் சுரண்டலுக்கும் ஏற்ற வகையில் தொழிற்சங்க சட்டத் திருத்தமும், வேலை நிறுத்த உரிமை பறிப்பு கருப்புச் சட்டங்களும் ஏவப்படுகின்றன.

1997-ஆம் ஆண்டு டெல்லியிலுள்ள பிர்லாவின் சுதந்திர பாரத் மில்லில் பணியாற்றிய 1800 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு வாழ்விழந்த நிலையில், மே நாளன்று சர்வேஷ் சந்த் என்ற தொழிலாளி உடலெங்கும் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுக் கொண்டு மாண்டு போனார். ஆறாண்டுகளுக்குப் பிறகு, இப்போது மும்பையில் தால்வியும் கானும் அதேவழியில் மாண்டு போயுள்ளனர்.

இவர்களைக் கொன்ற பயங்கரவாதிகள் காடுகளில் தலைமறைவாகத் திரியவில்லை. ஆயுதங்களுடன் மறைவிடங்களில் பதுங்கியிருக்கவில்லை. இப்பயங்கரவாதிகள் ''கோட்டு - சூட்டு'' போட்ட கனதனவான்களாக, டாடா, பிர்லா, மோடி, அம்பானி, டி.வி.எஸ். என்று பல பெயர்களில் உலா வருகிறார்கள்.



மருத்துவமனையில் ஆனந்த தால்வியின் உடலைப் பெறக் காத்திருக்கும் அவரது தாயார் மற்றும் உறவினர்கள். கொலைகாரன் டாடாவுக்கு எப்போது தண்டனை?

## பொலிவியா: குமுறும் எரிமலை

தென்னமெரிக்காவிலுள்ள மிகவும் பின்தங்கிய ஏழை நாடான பொலிவியாவில் நடந்துவரும் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டம், அமெரிக்கக் கண்டத்தையே அதிர வைத்துள்ளது. கடந்த அக்டோபர் இரண்டாவது வாரத்தில், தலைநகர் லாபாஸ்-க்கு அருகிலுள்ள எல் அல்டோ நகரில் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களுக்கும் ஓரணியில் திரண்டு, அமெரிக்கக் கைக்கூலி ஆட்சியாளர்களின் 'சுதந்திர சந்தைக் கொள்கை'க்கு எதிராக போர்க்குணமிக்கப் போராட்டங்களைத் தொடுத்தனர். குறிப்பாக, அரசுத் துறையை தனியார்மயமாக்கும் சதிகளுக்கு எதிராக இப்போராட்டம் நடந்தது. பொலிவிய எரிவாயுவை அமெரிக்காவுக்கு அற்ப விலைக்கு ஏற்றுமதி செய்வதற்கு எதிராகத் தொடங்கிய இப்போராட்டம் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராகவும், அமெரிக்கக் கைக்கூலி அதிபருக்கு எதிராகவும் முன்னேறியது.

''சுதந்திர சந்தைக் கொள்கையால் எங்களுக்கு எந்தப் பலனும் இல்லை. அது எங்கள் வாழ்வைப் பறித்துவிட்டது. நாட்டை அடிமைப்படுத்தி விட்டது'' என்று குமுறிய தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும், ''அதிபர் சான்செஸ் டி லோசடா-வே நாட்டைவிட்டு வெளியேறு!'' என்று முழங்கியபடியே அந்நகரில் அரசு எந்திரம் செயல்பட முடியாமல் முற்றுகையிட்டு சாலை மறியலிலும் கிளர்ச்சியிலும் இறங்கினர். அவர்களை ஒடுக்க வந்த போலீசு - இராணுவத்துடன் வீதிகளில் வீரப்போர் புரிந்தனர். இப்போராட்டத்தில் 86 பேர் வீர மரணமடைந்து தியாகிகளாயினர். இப்போராளிகளின் நினைவை நெஞ்சிலேந்தி உழைக்கும் மக்கள் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் சென்றனர். பீதியடைந்த அதிபர் எல் அல்டோ நகரில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து, அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டார்.

நகரெங்கும் இராணுவக் கவச வண்டிகள் அணிவகுப்பு நடத்தி போராளிகளைப் பெருமளவில் கைது செய்தும், தெருவில் மக்கள் நடமாடக்கூட தடைவிதித்தும், துப்பாக்கிச் சூடுகள் நடத்தியும் அரசு பயங்கரவாதம் ஏவிவிடப்பட்டது. இத்திடீர் இராணுவ சர்வாதிகார அடக்குமுறையை எதிர்கொள்ள முடியாமல், வீரஞ்செறிந்த இப்போராட்டம் தற்காலிகமாகப் பின்வாங்கியிருந்தாலும், இன்னமும் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. இப்போராட்டத் தீ இப்போது இதர பொலிவிய நகரங்களிலும் பற்றிப் படர்ந்து வருகிறது. போராட்ட பெருநெருப்பைக் கண்டு அஞ்சிய அதிபர் அமெரிக்காவுக்குத் தப்பியோடி விட்டார். துணைஅதிபரான கார்லோஸ் மோசா புதிய கைக்கூலி அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.

பொலிவிய தொழிலாளர்கள் பொருளாதாரவாத செக்கு மாட்டுப் பாதையில் சுற்றிக் கொண்டு இருக்காமல், உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராக தொடர்ந்து அரசியல் பிரச்சாரம் - கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொலிவிய மக்களின் வீரஞ்செறிந்த இப்போராட்டம் முன்னுதாரணமிக்கதாகவும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களுக்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு அபலைக்கெதிரான ஈனச் செயல்



தமிழக அவமானம்: ஆணாதிக்க சாதிவெறியர்களால் அவமானப்படுத்தப்பட்ட முத்துமாரி.

அமைதியான கிராமம். மதுரைக்கு அருகிலுள்ள கீழஉரப்பனூர். செப்டம்பர் 29-ஆம் தேதி முத்துமாரி என்னும் இக்கிராம தாழ்த்தப்பட்ட பெண், செய்தியாளர்களின் முன் கதறி அழுதபோதுதான், அவ்வூரின் அமைதியின் பின்னணி அம்பலத்துக்கு வந்தது. திண்ணியம், பள்ளப்பட்டி போல் மலத்தைத் தின்ன நேர்ந்த கொடுரத்தை உலகிற்கு வெளிக் கொணர்ந்தார், முத்துமாரி.

''எங்களுக்குனு சொந்தமா காடு, கரைன்னு எதுவுமில்லங்க. எம் புருஷன் காட்டு வேலைக்குப் போவாரு. நானும் காட்டு வேலைக்குப் போறது. .... ராஜான்னு (புள்ளி ராஜா?) கள்ளர் சாதி ஆளு ஒருத்தரு என்னைய எங்கன்னாலும் கேலி, கிண்டலாப் பேசறது, எகடாசி பண்றது, பின்னாடியே வர்றதுன்னு தொந்தரவு கொடுத்துக்கிட்டிருந்தாரு. நானும் சரி, வெளியில சொல்லப் போயி, ஏதாச்சும் பிரச்சனை வந்துருமோன்னு பயந்துகிட்டு பொறுத்துக்கிட்டிருந்தேன்.

அன்னிக்கு மத்தியானம் 2 மணிக்கு நான் புல்லுக் கட்டச் சுமந்துகிட்டு, மாட ஓட்டிகிட்டு வந்துக்கிட்டுருந்தேன். ராஜாங்கறவுரு திடீர்னு அங்க வந்து நின்னுகிட்டு, என் கையப் புடுச்சி இழுத்தாரு. நான் பதறிப் போய் அவர தள்ளிவுட்டுட்டு, கண்ட மேனிக்கு திட்டிகிட்டே ஓட ஆரம்பிச்சேன். அந்தாளு வெரட்டிகிட்டே வர்றாரு.. நாளைக்கு பஞ்சாயத்தக் கூட்டி இதச் சொல்றேன்னு சொன்னதும் 'போடிபோ, நா வந்து கவனிச்சுக் குறேன்'ன்னு சொன்னாரு.

எம் புருசன் நைட்டு ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்தாரு. அவருகிட்டே சொல்லி அழுதேன். கொஞ்ச நேரத்துலேயே ரர்ஜாங்கறவுரு, அவரு பெண்டாட்டி விஜயா, பக்கத்துத் தெருவுல இருக்கற மொக்கையன்னு ஒரு பத்துப் பன்னெண்டு பேரு வந்தாங்க. மொக்கையன்ங்கறவரு எம் புருஷன பார்த்து, ''ஏய் பிச்சை, இங்க வாடான்னாரு.'' இவரு கையகட்டிகிட்டு போயி நின்னாரு. அவரு, ''ஏண்டா, ஓம் பொண்டாட்டி ராஜாவ கண்டமேனிக்கு திட்டினாளாமே, என்னடா சங்கதி''ன்னாரு. இவரு பேச ஆரம்பிச்சவுடனேயே அந்த ராஜாங்கிறவரு, என் முந்தானைய புடிச்சி இழுத்து சரமாரியா அடிக்க ஆரம்பிச்சிட்டாரு. என் புருசன் கத்துறாரு. அதுக்குள்ள இந்த விஜயாங்கறவ எதையோ சடார்னு மூஞ்சியிலே விசிறியடிச்சா. ஒரு நிமிசத்துக்கு ஒண்ணும் புரியல. அப்புறம்தான் தெரிஞ்சது, நரகல் வாடை. என் சீலை, ஜாக்கெட்டெல்லாம் கிழிஞ்சு கிடக்கு. மூஞ்சியிலிருந்து தோள்பட்டை வரை நரகலு. கதறியழுதேன். மொக்கையன் ராஜாவப் பாத்து, ''ஏண்டா, நா இவள மொட்டையடிச்சி. கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதமேல ஏத்திவிடலாம்னு பாத்தா நீங்க இப்படிப் பண்ணீட்டீங்களே''ன்னு சொல்லிட்டு போயிட்டாரு.

விடிய விடிய எனக்குத் தூக்கம் வரல, செத்துப் போயிரலாமான்னு தோணிச்சி. விடிஞ்சவுடன நானும் எம் புருசனும் எங்க மாமா வீட்டுக்குப் போனோம். நான் நடந்ததச் சொல்லி அழுதேன். அவரு மூலமாத்தான் மக்கள் கண்காணிப்பகத்துல சொல்லி (People's Watch) பேப்பர்ல வந்துச்சு.

இதைப் பற்றி கள்ளர் சாதிப் பெண்கள், ''அவ சொல்றதெல்லாம் பொய்தானுங்க. அந்த ராஜாவுங்கறவுரு அப்பிராணி, அவரு பாட்டுக்கு வேனு (Van) ஓட்டி பொழச்சிகிட்டிருந்தாரு. இவ துணி தொவைக்க போன இடத்துல, இரண்டு பொம்பளைகிட்ட, ராஜாவோட பொண்டாட்டி விஜயாவுக்கும், விஜயாவோட சித்தப்பா மகன் கார்மேகங்கிறவருக்கும் தொடர்பிருக்குன்னு பேசிருக்கா. அதனாலதான், பொறுக்க முடியாம இந்தப் பொம்பளை மலத்தக் கரைச்சி ஊத்திப்புட்டா. இது இரண்டு குடும்பத்துக்


இப்போது விற்பனையில்...

## ஈராக்: படையெடுப்பின் பின்னால்....

மும்பையைச் சேர்ந்த ''அரசியல்-பொருளாதாரத் துக்கான ஆய்வுக் குழு'' (Research unit for political Economy)வினரால் வெளியிடப்படும் ''இந்தியப் பொருளாதாரத்தின் கூறுகள்'' (Aspects of India's Economy) என்ற பத்திரிகை வெளியிட்ட சிறப்பிதழின் தமிழாக்கம்.




ஆக்கிரமிப்பின் பின்னே பொதிந்துள்ள அமெரிக்காவின் உலக மேலாதிக்கச் சதிகளையும் போர்த்தந்திர திட்டங்களையும் அரசியல் பொருளாதாரக் காரணிகளையும் பிரமிக்கத்தக்க வகையில் தொகுத்தளிக்கிறது, இந்நூல்.

உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவந்துள்ள இந்நூல் இப்போது தமிழில்...

புதிய ஜனநாயகம் வெளியீடு — 236 பக்கங்கள். விலை: ரூ. 60/-

நூல் கிடைக்குமிடம்

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
(நூலைப் பதிவஞ்சலில் பெற ரூ. 17/- சேர்த்தனுப்புக)



படிப்பகம்

குள்ள பெரச்சனைங்க. சாதிப் பெரச்சனையாயிருந்தா அவுக இந்தத் தெருவுல நடக்க முடியுமா?'' என்றனர். இடையில் வந்த மொக்கையன், ''சார், மலத்தக் கரைச்சு ஊத்தினது தப்புத்தான். ஆனா, மத்தப்படிக்கு அவ சொல்றது பொய்ங்க..'' என்றார்.

தாழ்த்தப்பட்ட பள்ளர் சாதி மக்கள், ''நாங்க கள்ளவூட்டு தெரு பக்கமே போறதில்லை. ஏதாச்சும் பெரச்சனையாயிரும்னு பயந்துகிட்டுதான் நாங்க எதுவும் கேட்டுக்குறதில்லை. நாங்க ஏதாச்சும் நாளு கிழமைன்னா, விசேசம்னா ரேடியோ போடக்கூடாது, போஸ்டர் ஒட்டக் கூடாது, கட்சிப் பாட்டு எதுவும் போடக் கூடாது. ஆனா அவுங்க மட்டும் தேவர் பாட்டுப் போடுவாங்க. என்னத்தச் சொல்லறது... இப்பவும், வயசுப் புள்ளைங்க பஸ்ல போக முடியாது. கேலி கிண்டல் பண்ணுவாங்க. முத்துமாரிக்கு மட்டும் இந்த அவமானம் நடக்கலீங்க. அஞ்சு வருசம் முன்னாடியே, எங்க காலனியச் சேர்ந்த இரண்டு பொம்பளங்கள பஞ்சாயத்துல வச்சு சீலையை அவுத்து விட்டு ஓடவிட்டாங்க'' என்கின்றனர். அவமானப்படுத்தப்பட்ட பெரியவீரி என்ற தாழ்த்தப்பட்ட பெண் அதிர்ச்சியுடன் அதை நினைவுகூர்கிறார்: ''அது நடந்து நாலஞ்சு வருசமாய்ச்சி. எதுத்த வூட்டுல எங்க உறவுக்காரங்க இருக்காக. அவுங்களுக்கும், கள்ள வூட்டு ஆளுகளுக்கும் இடப்பிரச்சினை. கள்ள வூட்டு ஆளுக, அவுகள அடிச்சிப்புட்டாக. இந்தப் பெரச்சனைக்காக பஞ்சாயத்துக் கூட்டினாக, நாங்க, சாட்சியாத்தான் போனோம். ஆனா, போன எடத்துல கள்ள வூட்டுப் பொம்பளைகளும், ஆம்பளைகளும் சேந்துகிட்டு எங்கள அடிச்சி சீலைய உருவுகிட்டு வெரட்டுனாக.''

இப்போது அரசும் அதிகாரிகளும் ''இச்சம்பவம் சாதிச் சண்டையில்லையெனவும் இரு குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினை மட்டுமே'' என்றும் தங்களுக்கும் வாய், குதவாய் என்று தனித்தனியாக இல்லையென்று நிரூபிக்கிறார்கள். ஆதிக்க சாதிவெறியர்களிடையே அன்றாடம் ஆயிரம் பிரச்சினைகள் நடக்கின்றன. அதை இப்படித்தான், ஒருவர் மலத்தை ஒருவர் தின்று தீர்த்துக் கொள்கிறார்களா என்றும் தெரியவில்லை. கூத்திரம் பாக்கம் தாழ்த்தப்பட்டோருக்கு 'சுத்தம் பற்றி போதித்த ஊத்தவாயன் சங்கராச்சாரி, இப்போது தாழ்த்தப்பட்டோர் மீது இருக்கும் மலத்தை நக்கிச் சுத்தம் செய்வாரா என்பதும் தெரியவில்லை.

● பால்ராஜ்

# பாமரர்களின் பக்தியே ஆர்.எஸ்.எஸ்.-இன் அடித்தளம்!

*''தமிழ்நாட்டில் இந்து உணர்வு பரவுவதற்கு சங்கம் (ஆர்.எஸ்.எஸ்) உதவும் அதேசமயம், இந்து மத உணர்வு அதிகரித்து வருவது சங்கத்துக்கு அடித்தளமாகவும், ஏணிப்படியாகவும் அமைகிறது; ஒரு காலத்தில் கிரகணம் பிடித்ததாக இருந்த இந்த மாநிலத்தில் சங்க வேலையும் இந்து மத உணர்வும் கைகோர்த்துக் கொண்டு வளர்ச்சியடைகின்றன.''*

(தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து எழுச்சியின் கதை, ஆர்.எஸ்.எஸ். வெளியீடு, பக்.36).

பாமர மக்களிடையே பக்தி உணர்வை, கடவுள் நம்பிக்கையைப் பரப்புவதுதான் தனது வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்பது ஆர்.எஸ்.எஸ்-பார்ப்பனர்களின் உத்தியாக உள்ளது. இதற்காகத் தமது அமைப்புடன் சம்பந்தமில்லாத தன்னெழுச்சியான வழிபாடுகளைக் கூட வலியப்போய் ஆதரித்தும் உரிமை பாராட்டியும் மோசடி செய்கிறார்கள்

*''இந்துமயமாக்கலை நீக்கும் அரசியல் நாத்திகம் உள்ள ஒரு மாநிலத்தில் பழிதீர்க்கும் தன்மையோடு இப்போது இந்துமதம் மீள்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் சில மத இயக்கங்கள் மறு உருப்பெறுகின்றன; மாநிலத்தின் அரசியல் - சமூக சிந்தனையில் திராவிடமயமாக்கலை நீக்குவது துவங்கியுள்ளது.*

*முதலாவதாக, ஐயப்பா இயக்கம். இது மிகப் பெரியதாகவும், மிக நுண்ணிய அளவில் ஊடுருவிப் பரவக் கூடியதாகவும் சிறுகச்சிறுகப் பரிணமித்தது; அதேசமயம் இளைஞர்களை ஈர்த்து, அவர்களுக்கு ஒரு பலமான மத அடையாளத்தை அளிக்கும் மிகவும் பிரபலமான இந்து இயக்கமாக அமைந்தது. இப்போது, ஒரு கோடிக்கும் மேலான மக்கள் தமிழ்நாட்டில் இருந்து சபரிமலைக்குப் போகிறார்கள். இதற்கு அர்த்தம், ஏராளமான நுண்ணிய அளவிலான ஊர்வலங்களாக லட்சக்கணக்கான மக்கள் 48 நாட்கள் கோவில் கோவிலாகப் போய் இறுதியில் சபரிமலைக்குப் போகிறார்கள். கேரளத்தில் உள்ள சபரிமலைக்கு யாத்திரை போவதற்கு முன்பு, 48 நாட்கள் ஒவ்வொரு பக்கமும் கடுமையான ஒழுங்கை கடைப்பிடிக்கிறார்கள்.''* (மேற்படி நூல், பக். 33)

பார்ப்பன இந்து மதத்தால் அமங்கலமாகக் கருதப்படும் கறுப்பு உடை அணிவது, இசுலாமியர், மற்றும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பக்தர்களும் கலந்து கொள்ளலாம் என்று அனுமதிப்பது, யாத்திரையின் ஒருபகுதியாக ஒரு இசுலாமிய தர்காவில் பூசை செய்வது என்று இந்துத்துவக் கொள்கைக்கு மாறானதாக ஐயப்பா வழிபாடு இருக்கிறது; இதன் காரணமாக சங்கராச்சாரி, ஜீயர் போன்ற பார்ப்பன மடாதிபதிகளால் ஒதுக்கப்பட்டிருந்தது ஐயப்ப வழிபாடு. பிற்காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வந்ததால் ஐயப்பா வழிபாட்டை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டனர். ஆனாலும், தற்போது ஐயப்ப மோகம் தணிந்து, கட்டுப்பாடு - ஒழுங்கு சீர்குலைந்து, படிப்படியாக சீரழிவுகள் ஏற்கத்தக்கனவாக ஆகிவிட்டன என்பதுதான் உண்மை.

*''அடுத்து, பிரபலமான மத இயக்கம் ஆதிபராசக்தி இயக்கம். ஒரு சித்தரை மூலவராகக் கொண்ட ஒரு சக்தி பீடம் மேல்மருவத்தூரில் உள்ளது. இது இலட்சக் கணக்கான பக்தர்களை குறிப்பாக, பெண்களை ஈர்க்கிறது. அனைவரும் செவ்வாடைகள் - பெண்கள் சேலையும், ஆண்கள் வேட்டியும் சட்டையுமாக அணிவதன் மூலம் வெளிப்படையான தொரு மத அடையாளம் பெறுகின்றனர். தமிழ்நாடு முழுவதும் ஆயிரக் கணக்கான வழிபாடு மன்றங்களை இந்த இயக்கம் பெற்றிருக்கிறது. இந்தப் பீடமும் மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளது. இந்த இயக்கத்தைத் தொடங்கிய ஸ்ரீ பங்காரு அடிகளார் ஒரு சித்தராகக் கருதப்படுகிறார்.''* (மேற்படி நூல், பக்.34)

www.padippakam.com

பங்காரு அடிகளார் என்பவரின் குடும்பத்தாலும் ஒரு சிறு கும்பலாலும் தொடங்கப்பட்ட ஆதிபராசக்தி வழிபாட்டு இயக்கம் கூட இந்துத்துவா - பார்ப்பன மத நம்பிக்கைகளுக்கு மாறானதாகும். மத ஆச்சாரங்கள் எதையும் கடைபிடிக்காத, தான்தோன்றியான பங்காரு, தன்னையே அம்மனாக அறிவித்து, ஒரு பெரும் கூட்டத்தின் ஆதரவைப் பெறும் வரை போலி சாமியார் என்று பார்ப்பன மடங்களாலும், பீடங்களாலும் ஒதுக்கப்பட்டு, பார்ப்பன செய்தி ஊடகங்களால் கேலி செய்யப்பட்டார்.



தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். காலூன்ற உதவிய பார்ப்பன துக்ளக் சோ.

பெண்கள், குறிப்பாக, சூத்திரப் பெண்கள் பூசைகள், யாகங்கள் - வேள்விகள் நடத்துவதை, ஆகம விதிகளுக்குள் அடங்காத வழிபாட்டுத் தலங்கள் கட்டி பூசைகள் - ஆராதனைகள் செய்வதை பார்ப்பன இந்துமதம் ஏற்பதில்லை. சித்தர் மரபு என்பதே பார்ப்பனிய கடவுள் - மதக் கோட்பாடுகளுக்கே எதிரானது; ஆதி பராசக்தி கும்பல் சித்தர் மரபு உரிமை பாராட்டுவதே ஒரு மோசடி, பார்ப்பன சங்கர மடத்துக்குப் போட்டியாக ஆரம்பிக்கப்பட்டதுதான். இருந்தும் தமது இந்துத்துவா கூடாரத்தின் பலத்தைப் பெருக்கிக் கட்டவும், ''இந்து'' என்கிற போர்வையில் பிற்படுத்தப்பட்ட மக்களை ஈர்க்கவும் ஆதிபராசக்தி கும்பலையும் தனது கணக்கில் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

அதேபோல, பார்ப்பன - இந்துமத வழிபாடுகளுக்கு மாறான இன்னொரு வழிபாடுதான், பழநிக்குக் காவடி தூக்குவது. மச்சக் காவடி, சேவல் காவடி என்று கூறிக் கொண்டு, மீன் - கோழி படையல் வைத்து முருகனை வழிபடுவது இதில் முக்கியமான அங்கமாகும். இதெல்லாம் பார்ப்பன ஆகம விதிகளுக்கோ, வழிபாடுகளுக்கோ மாறானது என்று தெரிந்தும், தமிழ்நாட்டிலேயே அதிகமான வருவாயுள்ள கோவில் என்பதால் பார்ப்பனர்கள் உள்ளே புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டார்கள். என்ற போதும் இப்போதும், இராமேசுவரம், காஞ்சி, திருவரங்கம், சிதம்பரம் கோவில்களைப் போல தங்களின் புண்ணியத் தலமாக பழநியை அவர்கள் கருதியதில்லை. இருந்தும் இந்துத்துவா முகாமுக்கு பலம் சேர்க்கும் சூழ்ச்சியின் ஒரு அங்கமாக முருகன் வழிபாட்டையும் அதில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

*''மூன்றாவது இயக்கம் காவடி இயக்கம். இலட்சக்கணக்கான முருகக் கடவுளின் பக்தர்கள் பழனிக்குக் காவடி எடுக்கிறார்கள். இந்த எண்ணிக்கை 20 ஆண்டுகளுக்கு முன்பு பத்தாயிரக்கணக்கானவர்களாக இருந்து, தற்போது திருச்செந்தூர் கடற்கரையில் முருகக் கடவுளின் சூரசம்ஹாரத்தைக் காணவும் வழிபடவும் லட்சக்கணக்கான பக்தர்கள் திரளுகிறார்கள்.''* (மேற்படி நூல், பக்.34).

*''இதேமாதிரி நான்காவதொரு இயக்கமாக, ரமண மகரிஷி வழிபட்ட அருணாச்சல மலையில் மாதாந்திர பரிகாரமாக கிரிவலம், 5 இலட்சத்துக்கும் குறையாத பக்தர்களை ஈர்க்கிறது. ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு இப்படி ஒன்றே கிடையாது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சிவன் கோவில்களில் 15 நாட்களுக்கு ஒரு முறை பிரதோஷ நாளன்று பத்தாயிரக்கணக்கான பக்தர்கள் திரளுவது வழக்கமாகியுள்ளது மற்றொரு சம்பவமாகும். இது கடந்த 2,3 ஆண்டுகளாகப் பெரும் பாய்ச்சலாக உருவெடுத்திருக்கும் புதிய விஷயமாகும்.*

*''பொதுவில், கடந்த 20 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான கோவில்கள் உருவாகியுள்ளன. கோவில்களில் இலட்சக் கணக்கான பக்தர்கள் திரளுகிறார்கள். குடிசைப்பகுதிகளிலும் கிராமங்களிலும் உள்ள மக்கள் மாரியம்மன் மற்றும் பிற தெய்வங்களுக்கான பாரம்பரிய விழாக்களை பெருமளவில் புதுப்பித்திருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தோற்றத்தை மீளாய்வு செய்யும் போது, தமிழ்நாட்டை தேசிய எதிர்ப்பு-இந்து எதிர்ப்பு சக்திகளின் பிடியில் இருந்து இந்து இயக்கங்கள் உண்மையில் மீட்கப்பட்டது நிரூபிக்கப்படுகிறது.''* (மேற்படி நூல், பக். 34-35).

எதற்கும் எதற்கும் முடிச்சுப் போடுகிறார்கள் பாருங்கள்! மக்கள் பக்தி - மூட நம்பிக்கைகளில் மூழ்கிப் போவதுதான் ஆர்.எஸ்.எஸ் - பார்ப்பனர்களின் கருத்துப்படி தேசிய உணர்வு பெறுவதாகும். இருண்ட சக்திகளின் தாக்குதல், சமூக, பொருளாதார வாழ்நிலையில் வீழ்ச்சி - நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாமர மக்கள் அதற்கான உண்மையான காரணங்களை அறியாத போது மூட நம்பிக்கைகள் அவர்களைக் கவ்விக் கொள்கின்றன. காலத்துக்குக் காலம் இத்தகைய மூட நம்பிக்கைகளின் மையம் மாறிக் கொண்டே வருகிறது. முதலில் திருவேற்காடு, அப்புறம் மாங்காடு, ஐயப்பன், மேல்மருவத்தூர் என்று மகிமையை - அற்புதத்தை தேடி அலைவது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. நடிகர்கள், அரசியல்வாதிகள் போன்ற பிரபலங்கள் இத்தகைய மையங்கள் உருவாவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதில் ஏதோ தேசிய உணர்வு பீறிடுவதாக ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் கதை கட்டுகிறார்கள்.

ஆனால், அவர்கள் இதோடு நிற்பதில்லை. பல்வேறு வழிகளிலும் பெருநகரங்கள் முதல் குக்கிராமங்கள் முதல் தனது கைக்கூலிகளை அமைப்பாக்கி அணிதிரட்டுகிறார்கள். தமிழ்நாட்டின் 20 மாவட்டங்களில் 25,000 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட அகில பாரதீய வித்யார்த்தி பரிசத் என்ற மாணவர் அமைப்பு; 19 மாவட்டங்களில் 70,000 பேரை உறுப்பினர்களையும், 82 கிளைகளையும் கொண்ட பாரதீய மஸ்தூர் சங்கம் என்ற தொழிலாளர் அமைப்பு; அனைத்து மாவட்டங்களிலும் 10,000 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட பாரதீய கிசான் சங்கம் என்ற விவசாயிகள் அமைப்பு; ஆண்டுக்கு 500 பெண்களுக்குப் பயிற்சி அளித்து சுமார் 100 கிளைகள் கொண்ட ராஷ்டிர சேவிகா சமிதி என்ற பெண்கள் அமைப்பு - இவையெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க.வின் மக்கள் திரள் அமைப்புகள். மற்றபிற அரசியல் கட்சிகளும் இவை போன்ற அமைப்புகளைப் பெற்றிருக்கின்றன. என்றாலும், மற்ற பிற கட்சிகளில் இருந்து பின்வரும் மாறுபட்ட அமைப்புகளையும் பணி


படிப்பகம்

www.padippakam.com

களையும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் நடத்தி வருகிறார்கள்.

*''100 க்கும் மேற்பட்ட பள்ளிகளை இணைத்துக் கொண்டிருக்கும் வித்யா பாரதி எனும் கல்வி நிறுவனங்களுக்கான ஒரு நிழற்குடை அமைப்பு உள்ளது. சென்னை மற்றும் அதைச் சுற்றி மட்டும் 15-க்கும் மேற்பட்ட பள்ளிகள்; சிலவற்றில் ஆயிரம் முதல் இரண்டாயிரம் மாணவர்கள் பயில்கிறார்கள். அதேபோல சேலத்தைச் சுற்றி ஒரு சங்கிலித் தொடர் பள்ளிகள் உள்ளன. தாலுகா அளவிலான குடியாத்தத்தில் கூட ஒரு சங்கிலித் தொடர் பள்ளிகள் உள்ளன.''* (மேற்படி நூல், பக். 29-30)

சராசரி 1000 மாணவர்கள் என்றால் கூட 100 பள்ளிகளில் ஒரு இலட்சம் மாணவர்களை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், வெளியில் வரும் போது இந்து வெறியர்களாக பயிற்றுவிக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதேபோல 13 முழுநேர ஊழியர்களைக் கொண்ட ''சமஸ்கிருத பாரதி'' என்ற அமைப்பை நடத்தி சமஸ்கிருதத்தில் பேசவும் எழுதவும் கற்றுத் தருகிறார்கள். இதன் மூலம் இராஜபாளையும் வட்டத்தில் பல பெண்கள் தங்கள் குடும்பங்களில் சமஸ்கிருதத்தில் உரையாடிக் கொள்வதாக ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ''சமஸ்கிருத சம்பாஷனா சாகிபிரமம்'' என்கிற வகுப்பும், அஞ்சல் வழி போதனையும் நடத்துகிறார்கள். *''சமஸ்கிருதம் மற்றும் தேவநாகிரி வரிவடிவத்துக்கு எதிராக ஒரு காலத்தில் திராவிட இயக்கங்கள் தீவிரப் பிரச்சாரம் நடத்திய தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் கற்றுக் கொள்வதில் ஆண்களும் பெண்களும் வெகுவாக ஆர்வம் காட்டுகின்றனர்.''* (மேற்படி நூல், பக். 30)

**ஆர்.எஸ்.எஸ். வளர்ச்சிக்குப் பங்காற்றிய இந்துமத-சாதி வெறியர்கள் தாணுலிங்க நாடார் (மேலே) மற்றும் ரங்கசாமி தேவர் (கீழே).**





பள்ளிகள், சமஸ்கிருத போதனை மட்டுமல்ல; சமூக சேவை என்கிற பெயரிலும் தமது செல்வாக்கைப் பரப்புகின்றனர். *''தமிழ்நாட்டின் 300 இடங்களில் 500-க்கும் மேற்பட்ட சேவைத் திட்டங்களை கொண்டு சேவா பாரதி ஊக்கமாகச் செயல்பட்டு வருகிறது. சேலம் அருகில், கல்ராயன் மலைகளில் உள்ள கருமாந்துரையை மையமாகக் கொண்டு, தமிழ் நாட்டின் காடுகளிலும் மலைகளிலும் வாழும் மலைவாழ் மக்களிடையே வனவாசி சேவா கேந்திரம் பணியாற்றி வருகிறது. மாணவர்களுக்கான இலவச விடுதியும், அதனுடன் இணைந்து பால்வாடியும் கூட அங்குள்ளன.''* (மேற்படி நூல், பக்.30)

இவ்வாறு கல்வி, சமூக சேவை என்கிற பெயரில் புகுந்து மக்களிடையே இந்துமத வெறியூட்டி செல்வாக்குப் பெறும் நீண்டகால நோக்கில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் வேலை செய்கிறார்கள. இவற்றின் மூலம் மக்கள் விரோத கருங்காலி சக்திகளை பரவலாக விதைக்கிறார்கள் *''சமஸ்காரா பாரதி, இதிகாசா கல்கலனா போஜ்னா, பாரத் விகாஸ் பரிசத், லாக்கட உத்யோக் பாரதி - இன்னும் பிற அமைப்புகள் மூலம் ஏராளமான திட்டங்கள் கூட வளர்க்கப்படுகின்றன.''* (மேற்படி நூல், பக். 31).

பாமர மக்களைக் கவர்வதற்கு இவை போன்ற பல திட்டங்கள் வகுத்துச் செயல்படும் அதேசமயம், பார்ப்பன அறிவு ஜீவிகளுக்கென்று ''விஜில்'', தர்மரக்ஷன சமிதி என்று வேறு சில அமைப்புகளும் உள்ளன. இந்த அமைப்புகளின் செயல்பாடுகளைக் கூர்மையாகக் கவனிக்கும் போது, பார்ப்பனப் பிரமுகர்கள்தாம்




**பழங்குடியின மக்களை ஆர்.எஸ்.எஸ். குடும்பத்திற்குள் கொண்டு வர உருவாக்கப்பட்ட வனவாசி சேவா கேந்திரம்.**

ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் முதுகெலும்பாக விளங்குவது தெரியவரும்.

சுவாமி தயானந்த சரசுவதி, பத்மா சுப்ரமணியம் போன்ற பிரபல பார்ப்பனர்களை முன்னிறுத்தி ''தர்மரக்ஷன சமிதி'' என்கிற அமைப்பை ஆர்.எஸ்.எஸ். உருவாக்கியது. *''சுமார் 40 தர்மாச்சார்யாக்கள், பீடாதிபதிகள், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், கணக்காயர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பிரபல கருத்துருவாக்குபவர்கள் என்று 1200-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற மாநாடு ஒன்று சென்னையில் நடத்தப்பட்டது. மதமாற்றங்களைத் தடை செய்து இந்து விழிப்புணர்ச்சியூட்ட வேண்டும் என்று காட்டமாகக் குரல் கொடுக்கப்பட்டது. இந்து நலன்களை உயர்த்திப் பிடித்துக் காத்திடப் பாடுபடும் அரசியல் கட்சிகளுக்குத்தான் இந்துக்கள் ஓட்டுப் போட வேண்டும் என்று சில பீடாதிபதிகள் வேண்டுகோள் விடுக்குமளவு போனார்கள். ஆங்கிலக் கல்வி கற்ற அறிவு ஜீவிகள் அனைவருக்கும் இது வியக்கும்படி அமைந்தது; அவர்கள் எல்லாம் தம்மை ஆர்.எஸ்.எஸ். உடன் அடையாளப்படுத்திக் கொண்டு கருத்தரங்கம் முழுவதும் அமர்ந்து ஆர்வத்துடன் உரைகளைக் கேட்டனர். காஞ்சி சங்கராச்சார்யா பூஜ்ய திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், பூஜ்ய திரு பெஜாவர் சுவாமிகள், பூஜ்ய திரு தயானந்த சரசுவதி மற்றும் பல தர்மாச்சார்யாக்கள், அனைவரையும் ஈர்க்கும் உரைகள் வழங்கி கருத்தரங்குக்கு ஆசி வழங்கினார்கள்.''* (மேற்படி நூல், பக். 35).

பிரபல பார்ப்பன குருமார்கள் எந்த அளவுக்கு ஆர்.எஸ்.எஸ்-க்குப் பின்னே அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பதற்கான ஒரு சான்றாக இந்த



படிப்பகம்

www.padippakam.com

தர்மரக்ஷன சமிதி விளங்குகிறது ஆர்.எஸ்.எஸ். - இன் வளர்ச்சியடைந்த இன்றைய நிலையில் மட்டுமல்ல, கடந்தகால நெருக்கடி தருணங்களில் கூட தமிழ் நாட்டின் பிரபல பார்ப்பனர்கள்தாம் அந்த இயக்கத்துக்குத் துணை நின்றிருக்கிறார்கள்.



**இந்துப் பண்பாடே இந்தியப் பண்பாடு என்ற பெயரில் கருங்காலிகளை உருவாக்கி வரும் சம்ஸ்கிருத பாரதி.**

1948-இல் காந்தி கொலையைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். இயக்கம் நாடு முழுவதும் தடை செய்யப்பட்டது. அதற்கு முன்பு ஆங்கிலேயரின் காலனிய ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்தவர் டி.ஆர். வெங்கடராம சாஸ்திரி. இவர் பிரபல வழக்கறிஞராகவும் இருந்தார். காஞ்சி சீனியர் சங்கராச்சாரி, இந்த டி.ஆர்.வெங்கடராம சாஸ்திரியைத் தூது அனுப்பி, ஆர்.எஸ்.எஸ்.-க்கு எதிரான தடையை நீக்கும்படி நேரு அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதுவரை ஆர்.எஸ்.எஸ்.-க்கு எழுத்து பூர்வமான அமைப்புவிதிகள் கிடையாது. இரகசிய சதிவேலைகள் செய்வதற்காக சுமார் 20 ஆண்டுகள் அப்படி அமைப்பை வைத்திருந்தார்கள். சங்கராச்சாரியின் தூதர் என்ற முறையில் அப்போது சிறையில் இருந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கரை இந்த வெங்கடராம சாஸ்திரி சந்தித்து, எழுத்துபூர்வ அமைப்புவிதிகளை எடுத்துச் சென்று நேருவிடம் விவாதித்து ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீங்கச் செய்தார். தடை நீங்கி கோல்வால்கர் விடுதலையானதும் முதல் வேலையாக சென்னை வந்து வெங்கடராம சாஸ்திரிக்கும் சங்கராச்சாரிக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேபோல, விவேகானந்தர் பாறை நினைவகம் அமைப்பதற்கு, கன்னியாகுமரி மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது மாநில மந்திரியாக இருந்த ஆர்.வெங்கடராமன் தான் ஆர்.எஸ்.எஸ். சார்பாக வாதாடி கன்னியா குமரியில் உள்ள பாறை மீதான உரிமையைப் பெற்று நினைவக கமிட்டியிடம் ஒப்படைக்கச் செய்தார்.

1975-இல் இந்திராகாந்தி அரசு அவசரநிலை பிரகடனம் செய்து இரண்டாவது முறையாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தடை செய்தது. அப்போது சிறையில் அடைக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். தலைவர் பாலாசாகிப் தேவரஸ், இந்திரா அரசுக்கு ஆதரவு தெரிவித்து, தடையை நீக்கும்படி "மன்னிப்புக் கடிதம்" அனுப்பினர். இந்தச் சமயத்திலும் காஞ்சி சங்கராச்சாரியின் முன்முயற்சியில் ஆர். வெங்கடராமன் மூலம் தூது அனுப்பப்பட்டு ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் விடுதலையானார்கள்.

அவசரநிலை ஆட்சிமுடிந்ததும். தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். கால் பதிக்கச் செய்வதில் "துக்ளக்" சோ. ராமசாமி மிகமுக்கியப் பங்காற்றினார். ஆர்.எஸ்.எஸ். பற்றித் தமிழக மக்களிடையே நிலவும் தவறான கருத்துக்களைக் களைவதற்கான ஒரு யோசனையை சோ முன்வைத்தார். அதன்படி, துக்ளக் ஆசிரியர் குழுவை ஆர்.எஸ்.எஸ். தலைமைச் செயலகத்துக்கே அனுப்பி, சிறப்புப்பேட்டி எடுத்து, தானே தொகுத்து "சோ" வெளியிட்டார். ஆர்.எஸ்.எஸ்.-இல் இணைவதற்கான முகவரியும் கொடுத்து அழைப்பு விடுத்தார். இதைத் தனது இயக்கத்திற்கான ஒரு வரலாற்றுத் திருப்பு முனை என்று விசுவாசமாக ஆர்.எஸ்.எஸ். கொண்டாடுகிறது.

ஆர்.எஸ்.எஸ். இன் வளர்ச்சியில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் மட்டுமல்ல; இரங்கசாமி தேவர், தாணுலிங்க நாடார் போன்ற இந்து மத - சாதி வெறியர்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர். இவர்களைவிட கூடுதலான பங்காற்றியவர், முன்னாள் மந்திரி சி.சுப்பிரமணியத்தின் சித்தப்பாவும், சாதி வெறியனுமான சுவாமி சித்பவானந்தா என்பவர். தமிழ் நாட்டில் உள்ள ராமகிருஷ்ணா, விவேகானந்தா மடங்களின் தலைவராக இருந்த இந்த சித்பவானந்தா, தனது மடங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை ஆர்.எஸ்.எஸ். பயிற்சிகள் - முகாம்கள் நடத்துவதற்கு எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பண்ணையார்கள், தொழிலதிபர்கள், பெரும் வியாபாரிகள் வீட்டுப் பிள்ளைகள் தாம் ஆர்.எஸ்.எஸ். -இன் தூண்களாக வளர்க்கப்பட்டார்கள். அதோடு பார்ப்பனர்களின் கூடாரமாக விளங்கும் உண்மையை மூடிமறைத்து அனைத்து சாதி பிரமுகர்களும் இடம் பெற்றுள்ள ஒரு இயக்கம் என்கிற பிரமையை ஏற்படுத்துவதற்கு இவர்கள் எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுகின்றனர்.

**(முற்றும்)**

**சேவா பாரதி என்ற அமைப்பால் மேட்டுப்பாளையத்தில் நடத்தப்பட்ட திருவிளக்கு பூஜை: பெண்களை வளைக்க ஆர்.எஸ்.எஸ். வீசும் பக்தி வலை.**





படிப்பகம்

www.padippakam.com

# “முதலாளிகளுக்கு தரிசு நிலம் - விவசாயிகளுக்கு திருவோடா?” – வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

தருமபுரி, ஒரு நிரந்தரமான வறட்சி பாதித்த மாவட்டம். இங்கு பென்னாகரம் வட்டம், காவக்காடு, அம்மாசிக் கொட்டாய், பெரும்பாலை உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட மக்கள் பஞ்சம் பிழைக்க பெங்களூர், கேரளா என்று சென்று விட்டனர். இருக்கும் சிலரோ புறம்போக்கு நிலங்களை, குழந்தை குட்டிகளுக்கும் மேலாகப் பராமரித்து ஏதோ பயிர் செய்து காலத்தை ஓட்டுகின்றனர்.

இப்போது அதற்கும் வேட்டு வைத்துள்ளது, பார்ப்பன பாசிச ஜெயா அரசு. புறம்போக்கு நிலங்களை எல்லாம், 'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்' என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பட்டா போட்டு கொடுக்கச் சட்டமியற்றி உள்ளது. இதனால், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று 100 ஆண்டுகளுக்கும் மேலாக, 200 ஏக்கர் நிலத்தை உழுது வரும் 10 கிராம மக்களுக்கு, பல போராட்டங்களுக்கு பிறகும் பட்டா வழங்க மறுக்கிறது, அரசு.




இதற்கெதிராக வி.வி.மு காவக்காடு கிராமக் கிளை விவசாயிகளைத் திரட்டி, கிராமப் பஞ்சாயத்தை நடத்தியது. இதன் மூலம் பிரசுரங்களை விநியோகித்தது. “முதலாளிகளுக்கு தரிசு நிலம் - விவசாயிகளுக்கு திருவோடா?” என்ற முழக்கங்களுடன் 9.10.2003 அன்று பென்னாகரம் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதில், சக்திவேல் என்ற சிறுவயது தோழர் பாடிய புரட்சிகரப் பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்றது. பெருமளவில் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தொடர்ந்து போராட உறுதியேற்றனர்.

தகவல்:
விவசாயிகள் விடுதலை
முன்னணி,
பென்னாகரம்.

# செய்வதை விட்டுவிட்டு சினை ஆட்டுக்கு மயிர் புடுங்கும் வனத்துறை! - வி.வி.மு. கண்டனப் பேரணி - ஆர்ப்பாட்டம்

பெண்ணையாற்றின் கிளை ஆறான மலட்டாறு, விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் புதுப்பாளையத்திலிருந்து தொடங்கி திருத்துறையூர்பூண்டியில் முடிந்து பின் ஓடையாகத் தொடர்கிறது. இந்த ஆற்றில் எப்போதும் தண்ணீர் வராததால்தான், இதன் பெயர் மலட்டாறு. இதன் இருகரைகளில் 30 கி.மீ தூரத்திற்கு 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆற்றின் ஓரமாக புல், பூண்டுகூட முளைக்காத இப்பகுதியை மூன்று தலைமுறைகளாக, தலைச் சுமை மூலம் மண் நிரப்பி, பண்படுத்தி பயிர் செய்துவருகிறார்கள்.

காட்டுக் கொள்ளையரான வனத்துறையினர் இப்போது ஆற்றுப் படுகைக்கும் வந்துவிட்டனர். அரசு அதிகார முகமூடியணிந்து விவசாயிகளைப் பீதியூட்டுகின்றனர். வனத்துறை இடம் என்று விவசாயிகளை விரட்டுவதோடு, ஆடு - மாடு வரக்கூடாது, குழந்தைகள் விளையாட்டுக்குக்கூட மணலை அள்ளக்கூடாது, குறுக்கு நெடுக்கில் யாரும் நடக்கக் கூடாது என்று ஆயிரம் “கூடாது” களை முதலில் நட்டுவிட்டு, பிறகு மரக் கன்று நடப்போவதாக அலைந்து கொண்டிருக்கிறது, வனத்துறை.



இதற்கெதிராக திருவெண்ணெய் நல்லூர் வட்டம் விவசாயிகள் விடுதலை முன்னணி, பரந்துபட்ட விவசாயிகளை நேரடியாக களத்தில் திரட்டியது. “மரம் வளர்ப்போம், மழை பெறுவோம் என்ற பெயரில் வனத்துறை கொள்ளையோ கொள்ளை” என்ற தலைப்பில் பாதிக்கப்பட்ட எல்லா கிராமங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டியது. “செய்வதை விட்டுவிட்டு சினை ஆட்டுக்கு மயிர் புடுங்கும் வனத்துறை” என்ற பிரசுரத்தை நேரடியாக விவசாயிகளின் குடிசைகளுக்குச் சென்று விநியோகித்தது. இதன் மூலம் விவசாயிகளைத் திரட்டி ஆலோசனைக் கூட்டம் நடத்தியது.

ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இப்போராட்டத்திற்கு ஆதரவு கோரி அனைத்துப் பிரிவு மக்களிடமும் கையெழுத்து இயக்கமும் அதன் தொடர்ச்சியாக விழுப்புரத்தில் 20.10.2003 அன்று பேரணி - ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

இப்பிரச்சாரத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் சீர்குலைக்க, அதிகாரிகள் துணையுடன் உள்ளூர் ஆதிக்க மற்றும் பிழைப்புவாத சக்திகள் முயற்சி எடுத்து மூக்கறுபட்டன.

தகவல்:
விவசாயிகள்
விடுதலை முன்னணி,
திருவெண்ணெய்நல்லூர்
வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

வெளிநாட்டில் வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிக்கலாம் என நம்பிக் கொண்டிருந்த இந்த இளைஞர்களின் கனவு இன்று பகற்கனவாகி விட்டது. இன்று வரும், நாளை வந்துவிடும் என எதிர்பார்த்த வெளிநாட்டு வேலை கிடைக்காத ஏமாற்றமும், பணத்தை இழந்துவிட்ட துயரமும் இந்த இளைஞர்களை மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும்.

வெளிநாட்டுக்குக் கூலி வேலை தேடிப் போகும் இளைஞர்கள், மடியில் இருந்து பணத்தை எடுத்து "விசா"வுக்குச் செலவழிப்பதில்லை. நிலத்தை விற்றோ, வேறு ஏதாவது சொத்தை விற்றோ, இல்லை, கந்து வட்டிக்குக் கடன் வாங்கியோதான் ஏஜெண்டுகளுக்குப் பணம் தருகிறார்கள்.

வெளிநாட்டில் ஏதாவது ஒரு வேலை கிடைத்துவிட்டால், இந்தக் கடனை ஒரே வருடத்தில் அடைத்து விடலாம்; பிறகு சகோதரியின் திருமணத்தை முடித்து விடலாம்; தம்பியைப் படிக்க வைக்கலாம்; அப்பா, அம்மாவை உட்கார வைத்துச் சோறு போடலாம் என இவர்கள் மனதுக்குள் போட்டு வைத்திருந்த திட்டமெல்லாம் இந்த மோசடியால் சீட்டுக்கட்டுச் சரிவது போலச் சரிந்து விழுந்து விட்டது.

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவது ஒரு சேவைத் தொழில். அதில் கிரிமினல்கள் புகுந்து விட்டார்கள் என அரசாங்கம் சாக்குபோக்கு சொல்கிறது. ஆனால், இந்த கிரிமினல்களில் சரிபாதிப் பேர் சமூகத்தின் மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மை தற்பொழுது அம்பலமாகியுள்ளது.

இதோ, இந்தப் படத்தில் இருப்பவரின் பெயர் தலேர் மெஹந்தி. பஞ்சாபைச் சேர்ந்த புகழ் பெற்ற "பாப்" இசைப் பாடகர் இவர். தலேர் மெஹந்தி மீதும், அவரது சகோதரர் மீதும் வெளிநாட்டுக்கு இளைஞர்களை அனுப்பவதில் பண மோசடி செய்ததாக கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.



அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் கூலி வேலை தேடிச் செல்லும் இளைஞர்கள், தலேர் மெஹந்தி இசைக் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் என்ற போர்வையில் சட்டவிரோதமாக அனுப்பி வைப்பதை தலேர் மெஹந்தியின் அண்ணன் ஒரு தொழிலாகவே செய்து வந்திருக்கிறார். பஞ்சாபில் மட்டும் சீக்கிய இளைஞர்களை அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் சட்ட விரோதமாக அனுப்பி வைக்கும் தொழிலில், 500 கோடி ரூபாய் பணம் புழங்குவதாகவும், பாப் இசைக் குழுக்கள் என்ற போர்வையில் இந்தத் தொழில் நடந்து வருவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இதேபோல் சினிமா புள்ளிகள் கலை இரவு, நட்சத்திர விழாக்கள் என்ற பெயரில் இச்சட்டவிரோத கிரிமினல் தொழிலில் ஏற்கெனவே ஈடுபட்டு வருகின்றனர்.

வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக, உயிரைப் பணயம் வைத்தாவது வெளிநாட்டுக்கு வேலை தேடி ஓட நிர்பந்திக்கப்படும் இளைஞர்கள் ஒருபுறம்; அவர்களின் ஆசையை வைத்துப் பணம் பிடுங்கி ஏமாற்றும் கிரிமினல் தொழில் அதிபர்கள் மறுபுறம். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்காமல், அதற்குக் காரணமான தனியார்மயத்தை ஒழிக்காமல், இந்த கிரிமினல்கள் மீது மட்டும் வழக்குப் போடுவது புண்ணுக்குப் புனுகு தடவுவது ஆகாதா?

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No. TN/PMG(CCR) 621/03-05
www.padippakam.com



# சிவப்பஞ்சலி

உழைக்கும் மக்களின் விடுதலைக்காகப் போராடிய புரட்சியாளர் தோழர் தீபன் கடந்த 12.10.03 அன்று அதிகாலை 2.00 மணியளவில் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் அகால மரணமடைந்து விட்டார். ஹீமோஃபீலியா (Haemophilla) என்ற கொடிய நோயினால் அவருக்கு மரணம் ஏற்பட்டது.

28 வயது, இளங்கலை பட்டதாரியான தோழர் தீபன், கடந்த ஐந்தாண்டுகளாகப் புரட்சிகர மார்க்சிய–லெனினிய இயக்கத்தின் ஊழியராகச் செயல்பட்டு வந்தார். குறிப்பாக, கடந்த இரண்டரை ஆண்டுகளாக புரட்சிகர இயக்கத்தில் முழு நேர ஊழியராகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

தோழர் தீபனுக்கு ஹீமோஃபீலியா என்ற நோய் இருந்தது. இது, சிறு காயத்திலிருந்துகூட கட்டுப்பாடின்றி இரத்தம் உறையாமல் பெருக்கெடுக்கும் பரம்பரை நோயாகும். அதாவது, இந்நோய் உள்ளவர்களுக்கு வெளியேறும் இரத்தம் உடனடியாக உறையாமல்–வெளியேறிக் கொண்டே இருக்கும். உயிருக்கே ஆபத்து ஏற்படுத்தும். இத்தகை நோய் உள்ளவர்களின் மரபணுவிலேயே இந்நோய் கூறு இருப்பதால், இந்நோயைத் தடுக்க முடியாது. சில மருந்துகள் மூலம் தற்காலிகமாக, இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தலாம். மீண்டும் எப்போது வேண்டுமானாலும் இந்நோய் திடீர்த்தாக்குதல் நடத்தும்.

நோய் தாக்கும்போது தோழர் தீபனுக்கு பல் ஈறுகளிலிருந்து இலேசாக இரத்தம் கசியும். கடந்த இரண்டரை ஆண்டுகாலத்தில் 3,4 முறை இவ்வாறு தோழர் தீபனுக்கு இந்நோய் தாக்கி உடனடியாகச் சிகிச்சை பெற்றுள்ளார். ஆனால், திடீரென மருத்துவர்களாலேயே கண்டறிய முடியாமல், கல்லீரல், கணையம் போன்ற உள் அவயங்களில் இரத்தம் கட்டுப்பாடின்றி வெளியேறி 12–ந் தேதி தோழர் தீபன் அகால மரணமடைந்தார்.

நிழல் போன்று மரணம் அவரைப் பின்தொடர்ந்த போதும் அதைப்பற்றி கடுகளவும் அச்சம் கொள்ளாதவர். ஈறுகளில் இரத்தம் கசிவதை தோழர்கள் பார்த்துக்கூறினால், "அது ஒன்றுமில்லை, வேலையைப் பார்க்கலாம்" என்பார். சிறு கலவரம் கூட முகத்தில் தெரியாது. பழகிய தோழர்கள்தான் பதறிக் கொண்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வர். அப்போதும் உதட்டோரத்தில் சிறு புன்னகையுடன் "ஒன்றுமில்லை" என்று சமாதானம் செய்வார். தோழரின் மறைவு, ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. வயதான அவரது தாய்–தந்தையரையும், சகோதரர்களையும், அமைப்புத் தோழர்களையும் அவரது மரணம் நிலைகுலைய வைத்து விட்டது.

வேலூரில் 12.10.03 அன்று மாலை நடந்த தோழரின் இறுதி ஊர்வலத்தில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் பகுதியிலிருந்து திரளான தோழர்கள் கலந்து கொண்டு சிவப்பஞ்சலி செலுத்தினார்கள்.

தோழர் தீபன் கலை–இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு செலுத்தினார். அவர் எழுதிய கவிதைத் தொகுப்பு சென்னை–வேலூர் ம.க.இ.க. சார்பில் தமிழ் மக்கள் இசை விழாவில் (2000–ஆம் ஆண்டில்) வெளியிடப்பட்டது. புதிய கலாச்சாரம் இதழில் அவர் எழுதிய கவிதைகள் வெளிவந்துள்ளன. இருந்தும், கவிதை எழுதுவதைவிட, களப்பணியே முக்கியம் என்பதை ஏற்று புரட்சிப் பணியாற்ற தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சார்பில் 26.10.2003 அன்று சென்னையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடந்தது. தோழர் தீபன் எழுதிய "அம்மா... நான் தனியானவனில்லை" என்ற கவிதையுடன் , சிவப்பஞ்சலி பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. கூட்ட அரங்கில், தோழர் தீபனின் கவிதை புத்தகமும், கவிதை மேற்கோள்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கூட்டத்தில் உரையாற்றிய பு.ஜ.தொ.மு. மற்றும் ம.க.இ.க. தோழர்கள், சோர்வில்லாத அவரது புரட்சிப் பணியையும், மரணத்திற்கு அஞ்சாத அவரது நெஞ்சுறுதியையும் வீர நினைவிகளாக நெஞ்சில் ஏந்தினார். ம.க.இ.க. செயலர் தோழர் மருதையன் தனது உரையில், "மகனை பறிகொடுத்த தாயின் துயரத்தை எல்லோரும் உணர்ந்து கொள்கிறோம். ஆனால், பல தோழர்களைப் பறிகொடுத்த புரட்சிகர அமைப்புகள் படும் வேதனையை யார் அங்கீகரிக்கிறார்கள் ?" என்று வேதனையுடன் கூறினார். "சாவைப் கண்டு அஞ்சாத தோழர் தீபன் போன்று பலநூறு தோழர்களை புரட்சிகர அமைப்புகள் இன்னும் பிரசவிக்கும்" என்றார். அரங்கில் வைக்கப்பட்டிருந்த தோழர் தீபனின்படம் கூட்ட இறுதியில் அவரது பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் நினைவாக வழங்கப்பட்டது.

தோழர் தீபன் ஒரு கம்யூனிசப் புரட்சியாளர். மரணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது தெரிந்தும்கூட தனது இளமைக்காலம் முழுவதையும் புரட்சிக்கு அர்ப்பணித்த மாவீரர். தோழர் தீபன் வழியில் நாமும் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய உறுதியேற்போம்!

**புரட்சியாளர் தோழர் தீபனுக்கு எமது வீரவணக்கம்!**